96

96

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஸ்ரீபரந்தாமன்

பஜனாமிர்த கீதம்.

தாராபுரம் தாலூகா பஞ்ச[illegible]கர்
திருமலை ராமாநுஜதாச[illegible]
குமாரர்

இராமாநுஜதாசரால்

(இயற்றப்பெற்று)

பழனித் தாலூகா வீரலப்பட்டி
ஸ்ரீமாங் லி. அ. லிங்குசாமி நாயுடு அவர்களின்
பேருதவியால்

மதுரை, ஹரிஸமய திவாகரம் பிரஸில்
பதிப்பிக்கப்பெற்றது.

1934

[...ரிமை...ரைட்] ——— [விலை 0—6—0

OFFICE OF THE ... 4-OCT 1934 MADRAS

Q22:417
N34
172090.

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாயநம:

ஸ்ரீ பரந்தாமன்

பஜனாமிர்த கீதம்.

தாராபுரம் தாலூகா பஞ்சநகர்
திருமலே ராமாநுஜதாசர்
குமாரர்
இராமாநுஜதாசரால்
(இயற்றப்பெற்று)

பழனித் தாலூகா வீரலப்பட்டி
ஸ்ரீமாந் வி. அ. லிங்குசாமி நாயுடு அவர்களின்
பேருதவியால்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4 - OCT 1934
MADRAS

மதுரை, ஹரிஸமய திவாகரம் பிரஸில்
பதிப்பிக்கப்பெற்றது.

1934

ரிஜிஸ்தர் காபிரைட்] ——— [விலை 0—6—0

1887

784.0954

ஸ்ரீ

முகவுரை.

ஸ்ரீய: பதியான ஸர்வேஸ்வரன், தன்னபார கருணையால் சேதனர்கள் மோக்ஷத்தையடைந்து உய்வதற்காகச் சாஸ்திரங்களை வெளியிட்டான், அந்தச் சாஸ்திரங்களில் கர்மம், ஞானம், பக்தி முதலிய மோக்ஷோபாயங்கள் விதிக்கப்பட்டுள்ளன. இவ்வுபாயங்களைச் சேதனர்கள் எல்லா யுக காலங்களிலும் மேற்கொள்வதற் கியல்வதில்லை. கலியுகத்தை நோக்க, கிரேதா, திரேதா, துவாபர யுகங்களிலுள்ளவர்கள் பெரும்பாலரும் ஸத்வகுணங்களுடையவராயிருந்தனர். ஆதலால் அக்காலத்திலுள்ளவர்களே, கர்ம ஞான பக்திகளை அநுஷ்டிப்பதற்குரியவர்களாய் விளங்கினர்.

கலியுகம் மிகக்கொடிய காலமாதலால் இந்த யுகத்திலுள்ளவர்கள் பெரும்பாலரும் தமோகுண முடையவர்களாயிருப்பர். இவர்கள் கர்மஞான பக்திகளை அநுஷ்டிப்பது அருமையாகும். இதுபற்றியே ஸ்ரீசதாநீகன் என்ற செங்கோல் மன்னன் சௌநக பகவானை நோக்கி, இந்தக் கொடிய காலத்தில் எம்பெருமானை எளிமையாக அடைதற்குரிய மார்க்கத்தை அருளிச்செய்யவேண்டும் என்று வேண்டினர். சௌநக பகவான், இந்தக் கொடிய கலியுகத்தில் பகவந்நாம சங்கீர்த்தனத்தால் எம்பெருமான் திருவடிகளைஎளிமையாக அடையலாமென்று அருளிச்செய்தார். ஆகவே இதுவே எளிய உபாயமென்று வெளியாயிற்று.

இந்தப் பகவந்நாமத்தைக் கான ரூபமாகப்பஜனம் செய்தால் யாவர்க்கும் இன்பமளிக்கும். அதனுல் இந்தப் பகவந்நாமத்தை யாவரும் கையாள்வார்களென்ற கருத்தால் அடியேன், "பரந்தாமன் பஜனுமிர்த கீதம்" எனப் பெயரிய இச்சிறுநூலை யியற்றியுள்ளேன். இந்நூலைப் பயிலவே அடியேனுடைய புல்லிய அறிவு வெளியாகுமாயினும் இதைப் பயில்பவர்கள் என்னை நோக்காது இது பரந்தாமனை விஷயமாகக்கொண்டது என்ற விஷயத்தையே ஆராய்ந்து யாவரும் கையாள்வார்களென்ற துணிவால் இதனை வெளியிடலானேன்.

ஆழ்வாரைப்பற்றிய கீர்த்தனங்களும், ஓராண் வழியான ஆசாரியர்களைப்பற்றினவும், அர்ச்சாவதாரங்களில் சிறந்த கோயில் திருமலை பெருமாள் கோவில் திருநாராயணபுரம் திருமாலிருஞ்சோலை திருக்குறுங்குடி முதலான திவ்யதேசத்தெம்பெருமான்களைப்பற்றினவும், தசாவதாரங்களைப்பற்றினவும் இதில்நிறைந்துள்ளன. இக்கீர்த்தனங்களெல்லாம் பல வர்ண மெட்டுகளால் நவீன முறையில் அமையப்பெற்றுள்ளன. ஆதலால் இந்நூல் படிப்பவர்கட்கு இன்பத்தைவிளைக்குமென்றே கருதுகிறேன். மேலும் ஸம்பிரதாயமுறையை அவலம்பித்துத் தொடக்கத்தில் தனியன்களும், முடிவில் சாற்றுப் பாசுரங்கள் வாழித் திருநாமம் திருத் தாலாட்டு முதலியனவும் குறிப்பிடப்பெற்றுள்ளன.

இந்நூலை வெளியிடுவதற்கு முக்கிய உபகாரியாயிருந்த வீரலப்பட்டி ஸ்ரீமாந். வி. அ. லிங்குசாமி நாயுடுகாரின் நன்றி எழுமையும் மறக்கற்பாலதன்று மற்றும் சிலதார்மிகள் இதனை வெளியிடுவதற்குப் பொருளுதவி புரிந்தனர். அவர்கள்பாலும் நன்றி பாராட்டுங் கடப்பாடுடையேன்.

இங்ஙனம்,

இராமாநுஜன்,

பக்தாங்க்ரிரேணு.

ஸ்ரீ:

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4-OCT 1934
MADRAS

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

தி. இராமாநுஜ தாஸர்.

ஸ்ரீ

பொருளுதவி செய்த ஆஸ்திககுண அன்பர்கள்.

(பழனித்தாலூகா)

வீரலப்பட்டி	மகா-ா-ா-ஸ்ரீ	வி. அ. லிங்குசாமிநாயுடு அவர்கள் மிராஸ்தார், பஞ்சாயத்து கோர்ட்டு மெம்பர்.
ஆலமரத்துப்பட்டி	,,	வே. பழனிச்சாமி நாயுடு அவர்கள் மிராஸ்தார் & மணிலெண்டர்
ஷை	,,	சீனிவாசலு என்ற R. பாப்புசாமிநாயுடு மிராஸ்தார் & மணிலெண்டர்
பெரியகோட்டை	,,	வெ. சுப்பாநாயுடு மிராஸ்தார் P. C. பிரசிடெண்டு & கி. மு. ஷை தாலூகா போர்டுமெம்பர்
சாமியார்புதூர்	,,	K. குப்புசாமிகவுண்டர் மிராஸ்தார் கோவாப்ரேடிவ் சொஸைடி பிரசிடெண்டு
வீரலப்பட்டி	,,	ல. சு. சுப்பாநாயுடு மிராஸ்தார்
ஷை	,,	R. வேலுச்சாமிநாயுடு மிராஸ்தார்
ஷை	,,	ம. வீ. சாமா நாயுடு மிராஸ்தார்
ஷை		ஆரப்பகவுண்டர் மிராஸ்தார்
ஷை		சுப்பஞ்செட்டியார் சில்லரைக்கடைவியாபாரம்
வேலூர்	,,	சி. ராமசாமி நாயுடு காட்டன்புரோக்கர்

தாராபுரம் தாலூகா.

கோவிந்தாபுரம்	R. திருமலைசாமி நாயுடு மிராஸ்தார்
சென்னக்கல்பாளையம்	R. பழனிச்சாமிக் கவுண்டர் மிராஸ்தார்
ஷை	K. பெரியசாமிக் கவுண்டர் மிராஸ்தார்
புத்தூர்	A. முத்துச்சாமிக்கவுண்டர் மிராஸ்தார்
ஷை	K. துரைசாமிக் கவுண்டர் மிராஸ்தார்
சீலநாயக்கன்பட்டி	பழனிச்சாமிக் கவுண்டர் கி. மு. மணியம் & மிராஸ்தார்
ஷை	கந்தசாமிக் கவுண்டர் மிராஸ்தார்
ஷை	நாராயணசாமிக் கவுண்டர் மிராஸ்தார்
சின்னக்காப்பாளையம்	ராமசாமிக் கவுண்டர் மிராஸ்தார்

உடுமலைப்பேட்டை தாலூகா.

சிந்திலுப்பு	பெ. அமராபதி செட்டியார் மிராஸ்தார் & காட்டன் மெர்ச்சண்ட்
ஷை	மு. தி. நாச்சிமுத்துசெட்டியார்மிராஸ்தார் காட்டன் & ஜெனரல்மெர்ச்செண்ட்.

ஸ்ரீ:



ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஸ்ரீ பரந்தாமன்

பஜநாமிர்த கீதம்.

தனியன்கள்.

மணவாளமாமுனிகள் தனியன்.

(நம்பெருமாள் அருளிச்செய்தது.)

ஸ்ரீசைலேசதயாபாத்ரம் தீபக்த்யாதிகுணார்ணவம்
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம்முநிம்

குருபரம்பரையின் தனியன்.

கூரத்தாழ்வான் அருளிச்செய்தது.)

லக்ஷ்மீநாதஸமாரம்பாம் நாதயாமுநமத்யமாம்
அஸ்மதாசார்யபர்யந்தாம் வந்தே குருபரம்பராம்

எம்பெருமானார் தனியன்.

(கூரத்தாழ்வான் அருளிச்செய்தது.)

யோநித்யமச்யுதபதாம்புஜயுக்மருக்ம
வ்யாமோஹதஸ்ததிதராணித்ருணாயமேநே
அஸ்மத்குரோர்பகவதோஸ்யதயைகஸிந்தோ
ராமாநுஜஸ்யசரணௌஸரணம்ப்ரபத்யே

நம்மாழ்வார் தனியன்

(ஸ்ரீ ஆளவந்தார் அருளிச்செய்தது.)

மாதாபிதாயுவதயஸ்தநயாவிபூதிஸ்
ஸர்வம்யதேவநியமேநமதந்வயாநாம்
ஆத்யஸ்யந:குலபதேர்வகுளாபிராமம்
ஸ்ரீமத்ததங்க்ரியுகளம்ப்ரணமாமிமூர்த்நா

ஆழ்வார்கள் தனியன்.

(ஸ்ரீபராசரபட்டர் அருளிச்செய்தது.)

பூதம்ஸரஸ்சமஹதாஹ்வயபட்டநாத
ஸ்ரீபக்திஸாரகுலஸேகரயோகிவாஹாந்
பக்தாங்க்ரிரேணுபரகாலயதீந்த்ரமிஸ்ராந்
ஸ்ரீமத்பராங்குஸமுநிம்ப்ரணதோஸ்மிநித்யம்.

நம்மாழ்வார் விஷயம்.

வெண்பா

திருமா தணிமார்பன் திவ்விய சீர்சால்
பெருமான் மிசைப்பஜனை பேசத்—தருமாம்
பொழில்சூழ் குருகைப் பொலிந்திலங்கு மாறன்
எழில்சூ ழிணையடிக ளேத்து.

கணநாதா—என்ற வர்னமெட்டு.

இராகம்—நாட்டை. தாளம்— ஆதி.

பல்லவி.

சடகோபா உன்றன்
சரணகமலங்களித் தருணந்தந்திடுவாய்ஸ்ரீ (சடகோபா)

அநுபல்லவி

படநாகத் தெந்தை
பதகமலங்களையே நிதமுஞ்சிந்தனைசெய்யும் (சட)

வேதந்தந்தாய் உயரும்
விசிஷ்டாத்விதமது விரிவாய்விளங்கவே (வேதம்)

நாதன்பாஷ்ய காரரை
நளினமலரையொத்த திருவடிதனில்வைத்த (சட)

பாசபந்தம் போக்கி
பரமபதத்தின்வழி பண்புடன்காட்டுவாய் (பாச)

தாசன்ராமா நுஜன்
நேசமோடுவுனை பூஜிதஞ்செய்தேன் (சட)

---

(2) கல்யாணக்கனவிமரிசை என்ற ஓரடி வர்னமெட்டு.

நல்லோர்கள் துதிசடகோபனே சரணம்—மிக
நறுமணமலர்நிறை திருநகரியிலுறை (நல்லோர்)

எல்கிளர்வதனமு முயர்பிரக்யாதா
ஈரெட்டுவருடங்க ளியல்தவநீதா
பல்லுயிர்போற்றிடும் பங்கயப்பாதா
பாலன்ராமாநுஜன் பவமறுக்தருள்தாதா (நல்லோர்)

உடைய நங்கைவயிற்றில் வந்து
வைகாசித்திங்கள்
திடமாய் விசாகத்திற் பிறந்து
திருப்புளியி
னடியே கண்மூடியே யுகந்து
தவங்கள்செய்த
படியே வேதத்தின்மொழி தந்து
மதுரகவி

ஆழ்வார்தமக்கரு ளருட்பிரகாசன்
அனவரதமுந்திரு வரங்கன்றனேசன்
சூழ்வினைதீர்த்திடுந் தூயசர்வேசன்
சுத்தர்கள்படி தாம்ரவரணியின்வாசன் (நல்லோர்)

திருவரங்கம்பெரிய கோவில்
முதலாகிய
திவ்ய திருப்பதிகள் நாவில்
சிறந்திடவே
யருளே நிறைந்துயர்ந்த பாவில்
அமைத்துச் சொல்லப்
பெருமான் திகிரிசங்கு மாவில்
தண்டுடன் வாளும்
பெற்றுமேதற்பா னற்புதசேவையைக் காட்ட
பொலிகவென்று
நற்றமிழாலுறு பற்பலமங்களம் நாட்ட
ஜெய ஜெயவென்று
கற்றவர்மெச்சிய சற்சனருஞ் சீராட்ட
குணவிசேடம்
முற்றியபற்றறு நற்றவரும் பாராட்ட
மலர்கள் சூட்ட

கலைமகள்நாதனை யுதவியநாபன்
கழலிணையாகியே யமர்சடகோபன்
நிலைபெறுமாமகிழ் மலரணிமார்பன்
நித்தியசூரிகள் தனக்கொருதீபன் (நல்லோர்)

பச்சை முகில்நிறத்தோன் மீது
பஜனைகீதம்
பாடித் துதித்தடியே னேதும்
படிக்கருள்செய்
மெச்சி யிதனிலுள்ள தீது
தனைவிலக்கி
மேன்மை யுறவேபாராய் பாது
பராங்குசனே

இச்சையாயுன்பதஞ் சேர்ந்திடும்பேர்க்கும்
இசைதிருவாய் மொழியறைந்திடும்பேர்க்கும்
அச்சுதன்றிருவடி நச்சியயார்க்கும்
ஆணவமலங்களைப் போக்கியேசேர்க்கும் (நல்லோர்)

பாஷ்யகாரர் விஷயம்

பூமாதணிமார்பன் பொன்னரங்கேசன் புகழ்ப்பதத்தில்
பாமாலையாகவேபண்புடன்கீதம்பரிந்துரைக்கக்
காமாந்தகாரக்கடலைக்கடந்தகருணைவள்ளல்
ராமாநுஜமுனிமலர்ச்சேவடிநற்றுணைநமக்கே.

(3) இராகம்—காபி. தாளம்—ஆதி

கலிலோஹரிசரணமு என்றவர்ணமெட்டு.

பல்லவி

எதிராஜன் றிருவடியநுதின
மெண்ணுவாய் நன்மனதே யிதுதகு (எதி)

அநுபல்லவி

கதியேபெற நமக்கிதுவழியே
கன்மமும்நீங்கிடுமே கருதுவாய் ஸ்ரீமத் (எதி)

சரணம்

காமாமயக்கந்தனில் மூழ்கிடுங்கவலையும் நீங்கிடுமே உயர்
ராமாநுஜனெனவுரை யகமதில் ஞானமுமோங்கிடுமே.
தாமோதிரனர் திருமந்திரம்
தரணியில் விரிவாக வருளிய (எதி)

கருவினுருவாகிவந்து என்ற வர்ணமெட்டு

(4) எதிபதியுன்னிணையடிகள்
கதியெனவேயானடைந்து
மதிதனிலுன்நாமமந்ரம் துதித்தேனே
கதுமெனயிக்கன்மபாசக்
கடலையானும்நீந்தியேதா
னிதமுடனுன்கழல்கள்சேர அருள்வாயே
சந்ததமுமுந்தனையே
சிந்தனைசெய்தேயிருந்தே
னந்தமில்பேரின்பமதைத் தருவாயே
தந்தைநற்றாய்தாரமுடன்
றனயர்பெருஞ்செல்வமுமே
யெந்தனுக்கு நீயேயையா எதிராஜா
பூமகள்கோன்றென்னரங்கன்
றுளிணையாம்மாறனுக்கு
தேமலர்த்தாள் பாதுகையா யெழுந்தோனே
சாமியுந்தன்பாதமல்லால்
வேறுதுணையாதுமில்லை
ராமாநுஜமாமுனியெம் பெருமானே

மணவாளமாமுனிகள் விஷயம்.

(5) தசரத ராஜ குமாரா என்ற வர்ணமெட்டு.

வரமருள் மணவாள முனியே ஞானக் கனியே
யுயர்தனியே வாவா இனியே (வரமருள்)

அருமறைவடிவா யமர்ந்திடும் ரூபா
அய்ப்பசித்திருமூலந்தனில் வந்த சீமா
வரவரமுனியென வளர்திருக்கோமா

வல்வினை தீர்த்திட வாரும் துயர் தீரும்
உனைக்கோரும் எனைப்பாரும் (வரமருள்)

ஆதிசேஷவதாரமாகிய மூலா
ஆர்த்திப் பிரபந்தத்தை யருளிய சீலா
சோதி ப்ரகாசனேசுகுண பூபாலா

சுத்தர்கள் போற்றிடுந் தேவா இங்கே வாவா
எனைக்காவா யருள் மேவ (வரமருள்)

எதிபதியிணையடியென வெழுந்திலங்கி
துதிபல மொழிந்தாய் தூயனே விளங்கி
இதுததிராமாநுஜன் மொழிக்கிரங்கி

இக்ஷணமே யருளீசா பவநாசா
மலர்வாசா ஜெகதீசா (வரமருள்)

---

(6) அருட்கண்பார்த்தெனக்குன் என்ற மெட்டு.

ஆதிசேஷவதாரமாகிய மணவாளமாமுனியே உந்த
னடியேனுக் கார்துணை யருள்செய்வாய் மணவாளமாமுனியே
எதிராஜன் பதமாகி யெழுந்தருள் மணவாளமாமுனியே மிக்க
ஏழையேனுன் பாதந்துதிசெய்தேன் மணவாளமாமுனியே
குணவாளர்கூடியே துதிசெய்யு மணவாளமாமுனியே உந்தன்
குழந்தைகூவுகின்றேன் கூட்டிக்கொள் மணவாளமாமுனியே
நாயேன்ராமாநுஜதாசனை மணவாளமாமுனியே நீரும்
ரக்ஷித்தருளுவாய் நம்பினேன் மணவாளமாமுனியே

ஆண்டாள் விஷயம்.

கலிவிருத்தம்.

வேதமே வடிவாகிய மாதவன்
பாதமே துதிசெய்திடப் பாரினிற்
கீதமாகிய கீர்த்தனங் கூறிடக்
கோதை பாதங்கள் கோருதும் நாளுமே

இராகம்—கல்யாணி தாளம்—ரூபகம்.

(7) சோமசுந்தரனே என்ற வர்ணமெட்டு.

கோதா வந்தனம் உனைக்
கோரினேனே பாருந் தேனே (கோதா)

தாதுலாவுஞ் சோலை சூழ்ந்த
தண்மை நிறைபுத் தூரில்வந்த
மாதேயுன் பாதார விந்தம்
மைந்தன் காணத் தந்து பேணாய் (கோதா)

பாடியே வைத்தாய் பாமாலை
சூடியே தந்தாய் பூமாலை
நாடிவந்தேன் காலை மாலை
நத்தினேனே பத்தன் றானே (கோதா)

அவ்வில்லி புத்தூரை நண்ணி
ஆயர்பாடி யென்றே யெண்ணி
செவ்வையாக நோற்றாய் மண்ணில்
தேவியே சஞ்சீவி யேஸ்ரீ (கோதா)

பூமிபுகழ்தென் னரங்கன் றனையே
போற்றியே துதிக்கு மன்னையே
ராமாநுஜ தாசன் றன்னையே
ரக்ஷித்தாள வாயிவ் வேளை (கோதா)

---

(8) இராகம்—கமாஸ். தாளம்—சாபு.

மாத்தாட பாரதேனோ என்ற வர்ணமெட்டு.

பல்லவி

தாயே வுனை நம்பினேன்
தாராயுன்பாதம் (தாயே)

அநுபல்லவி.

தண்மை மிகுந்தகுல்லை தனிலவதரித்தஸ்ரீ (தாயே)

சரணம்.

காயாம்பு மேனியன்ஸ்ரீ காகுத்தன்றனைச் சேரக்
கழனிசூழ்ஸ்ரீவில்லி புத்தூரவதரித்த (தாயே)

பல்லாண்டு பாடிய பட்டர்பி ரானுக்கே
செல்வப் புத்திரியான தேவிஸ்ரீ யாண்டாளே (தாயே)

திருப்பாவை முப்பதும் செய்பியே மலர்மாலை
திருவரங் கேசற்கு தினமுஞ் சூடியேதந்த (தாயே)

ராமாநுஜ னென்னும் நாயேனை யுன்பதத்தில்
நேமம தாயடைய ரக்ஷித்த ருளுமம்மா (தாயே)

ஆசார்யர் விஷயம்.

(9) இராகம்—நாதநாமக்கிரியை. தாளம்—ஆதி.

ஆசாரிய சரணம் நமக்கு
அதுவே முடியினி லணியுமா பரணம் (ஆசாரிய)

பாசபந்தங்க ளெல்லாம் பறந்திட வோட்டி
பாஞ்சசன்யந் திருவாழியைச் சூட்டி
கேசவன் பதங்களே கெதியெனக் காட்டி
நேசமாய்த் திருமந்த்ரம் தனைநமக் கூட்டிய (ஆசாரிய)

மண்ணில்நாம் பிறவாமல் மருந்தையுங் கொடுப்பான்
மாயையினாற் றிரியையவரை யடிப்பான்
நண்ணிய நமனையும் நடுங்கிடத் தடுப்பான்
நாரணன் பதங்களில் நம்மையும் விடுப்பான் (ஆசாரிய)

நாடியே துதிக்கும் ராமாநுஜதாச
நாயேனுக் குதவும்நல் வேதவியாச
ஏடவிழ் மலரணி யரங்கவிஸ்வாச
எழில்மிகுந் திடும்பட்ட ரெனும்பிரகாச (ஆசாரிய)

---

(10) இராகம்—அடாணா. தாளம்—ரூபகம்.

பித்தம்தெளிய மருந்தொன்றிருக்குது என்ற வர்ணமெட்டு.

பத்தி மனத்துடன் பட்ட ரடிசேர
சித்தந் துணிந்திடு வோம் மிகப்
பற்பல வாகிய முற்பவங்கள் நீங்கப்
பாடிப் பணிந்திடு வோம் (பத்தி)

கண்ணொளி யில்லோர்க்குக் கண்கிடைத் தாப்போலே
காணுந் திருமந்திரம் அதைக்
காட்டிக் கொடுத்தநம் தேசிகன் நாமத்தைக்
களறுவதே சுகிர்தம் (பத்தி)

பயனற்றோ ரானாலும் பாங்கல்லோ ரானாலும்
பரிந்துபதேசம் செய்வார் திருப்
பஞ்ச சமஸ்காரம் ரஞ்சித மாய்ச்செய்து
பாவங்களைக் கொய்வார் (பத்தி)

ஆரியர் தங்க ளடியிணை யன்பில்லா
ராரங்கற்கு மல்லாதார் என்று
தேரிய நம் மணவாள மாமுனி
சீருபதேசச் சொல்லால் (பத்தி)

பூமாதணி மார்பன் பொன்னரங் கேசன்றன்
பொற்பதம் சேர்ப்பவனே நாயேன்
ராமாநுஜ னென்னும் தாசன் பணிந்திடும்
ரக்ஷகனும் இவனே. (பத்தி)

பரமபாகவதர்கள் விஷயம்.

(11) ராமாநுஜகுரு என்ற வர்ணமெட்டு.

பரமபாகவதர்கள் பதமதைத்துதிசெய்யப்
பாவங்களேதினி பயமில்லை நமக்கே (பரமபாகவதர்)

கரமதில்யாழ்தனைத் தரித்திடும்நாதன்
கண்ணியமிகுசுக சௌனகபிரகலாதன்
பெருமை மிகுந்தவம் ப ரீடருக்மாங்கதன்
பேசிடுமடிய வரென்னுந் தபோதனர் (பரமபாகவதர்)

வரவரமுனி திருவாய்மொழிப்பிள்ளை
வடக்குத்திருவீதிப் பிள்ளைநம்பிள்ளை
பெரியவாச்சான் பிள்ளையோடு அப்பிள்ளை
பேசிடும் பூருவ ரெனும் பெயருள்ள (பரம)

சண்ட னுந் தூதுவர்தமையருகேகூவி
தொண்டர்தம் பெருமையைச் சொல்லினன்மேவி
விண்டுவினடியரை வெகுண்டவன்பாவி
வேண்டியே துதித்திடுவோனே மேதாவி (பரமபாகவதர்)

சீர்பெருஞ்சீதரனருள் பெரும்பாதம்
தினந்துதித்திடும் ராமா நுஜன் சொலுங்கீதம்
பாரினிற் படித்தவர்தமக்கில்லை கேதம்
பண்புடன் கிடைக்குமால் பாதப்ராசாதம் (பரமபாகவதர்)

சிறியதிருவடி விஷயம்.

(12) மதுரக்கானகிளிகள்—என்ற மெட்டு

அருமைஞானவழியில்சேரும்
பெருமையான திறமையோனே
அரியின் குமரனுகுமாஞ்ச
நேயா நேயா வானலரிதன்னைக்
கௌவியசெவ் வாயா வாயா

திருமகளின்றுயர் தவிர்க்க
ரகுபதியின் மோதிரங்கொண்
டுயர் வரையின்மீது நீயும்
நின்று நின்று மிகச்
ஜெயமதாக வேலைதாண்டிச்
சென்று சென்று

கொடுமை மிக்க லங்கணியை
நொடியினிற் கனன்று கொன்று
கடிகமழிலங்கை யெங்குந்
தேடித் தேடி பின்னர்
வடிவுமிக்க தேவிதன்னை
நாடி நாடி

அன்புகொண்டு ஐயனாழி
யின்பமுடனே கொடுத்துத்
துன்பமதையே தவிர்த்த
நாதா நாதா உந்தன்
அன்பனைக் கண்பாரும் மலர்ப்
பாதா பாதா

பூமன் தந்தை யாகும்பரந்
தாமன்மீது பஜனைபாட
ராமாநுஜ தாசனைக்கண்
பாரும் பாரும் தினம்
சாமியநுமானே நீரும்
வாரும் வாரும்

அவையடக்கம்.

செந்திருவினாயக னூரூர்ந்தே செல்லுஞ்
சிறைக்கருடன் முன்புவரு மசகம்போலுஞ்
சந்திரனைச் சுற்றிலுமே யெண்ணிற்கோடி
தாரகைக ளேயிருக்கும் ஒளியைப்போலும்
அந்தமுடன் றோகைவிரித் தாடுமஞ்ஞை
அருகினில்நின் றாடும்வான் கோழிபோலுஞ்
சிந்தைமகிழ் வுடனுரைத்த கீதந்தன்னில்
திருக்கதனைப் பொறுத்தருள்வீர் கலைவலோரே.

பெரியபெருமாள் விஷயம்.

விருத்தம்.

கரியானைக் கதியளிக்க வருவானை
யுலகமெல்லாங் கலந்துநின்ற
பெரியானை யணியரங்கப் பெருமானை
பிரியமுறு பாவிலன்பு
புரிவானை மறைகடொறுந் திரிவானை
பணிவிடைசெய் யன்பர்க்கின்பந்
தருவானை யகமீதி லுறுவானைத்
துளவமலர் சாத்திவாழ்வாம்.

---

(13) இராகம்—கீர்வாணி. தாளம்—ரூபகம்.

பல்லவி.

மாதவனே உயர் மாதவனே

மலர்மகளின் மருணவுயர் (மா)

மண்விண்ணீரடியளந்தாய் (மா)

மஞ்சுநிகர் மேனியனே (மா)

அநுபல்லவி

வேதன்முதல்புரு கூதன்புத்தேளிரும்
ஆதரவாயுந்தன் பாதம் பணிகுவார் (மா)

எங்கும்புகழ் பொங்கும்ரங்கந்தனில் தங்கும் (மா)
விரிவாயுறுமறை மீதினிலுறு வாயரிதிருநாரண (மா)
அனைதந்தை குருதெய்வம்உனையலால் வேறெந்தனுக்கார் (மா)
உன்னடியார்தன்னடியிலென்னையுமே வைத்தருள்வாய் (மா)
அங்குமிங்கு மெங்குந்தங்கி விளங்குஞ் ஸ்ரீ (மாதவ)

சரணம்

தொண்டர்களெங்கணுங்கண்டு சேவித்திடும்
விண்டுவெனப் பேருங்கொண்ட தேவா
கண்டகரெங்கு முருண்டிடவே வந்தாய்
சண்டப்ரசண்ட கோதண்ட ரகுவீரா (மாதவனே)

கருணுகரனெனவேயுயர் திருவாழி யுங்கரமீதுரும்
ஹரியேயுயர்திருநாரண பரிபூரணனெனவேயுனை
அருமாமறை துதிசெய்திடுந் திருவேங்கட மலைமீதினி
லடியேன் சிலைவடிவாய்ப்பிறந்திடவே வரமருளையுயர் (மாதவ)

கரிமுறையிடவேதான் வரமருளிய திருநாதனே
குருகாபுரி சடகோபனு நித மேவியபதமே யதை
பெறவேசொலு முறையீதினிலறியாதுறு நவைநீக்கியே
சிறியேன் ராமாநுஜனைத் திருமாமலரடியினில் வை (மாதவ)

பெரிய பிராட்டியார் விஷயம்

(14) இராகம்—ஆனந்தபைரவி. தாளம்—ரூபம்.

பல்லவி.

அம்மாஎந்தனைப்பெற்ற அம்மாஸ்ரீதேவியே
அடியேனுன் னடைக்கலந் தாயே (அம்மா)

அநுபல்லவி.

சும்மாவிட்டாலுந்தன் சுதனுய்யும்வழியெங்கே
தோத்தரித்தேனேயருள் சுரந்துகண்ணாலேபாரும் (அம்மா)

சரணம்.

ஆதாரமாய்த்திரு வயோத்திதனில்வந்த
அய்யன்றன்றேவியே யடியேனுன்னரவிந்த
பாதாரவிந்தங்களைப் பற்றினேன்மிகவுந்தான்
பாலனுக்கருள் செய்வாய் பரந்தாமனருள்முந்த (அம்மா)

அண்டர்கள்படுந்துயர் கண்டுநீசகியாமல்
அமர்ந்தாயேயிலங்கையி லன்றுநீசிறையினில்
முண்டகாசனையேநீ முகுந்தன்றன்மார்பினில்
மூவுலகோர்போற்ற ஆவலாய்மேவின (அம்மா)

பக்திசெய்துன்னுமம் பணியவறியேனம்மா
பாவங்களெத்தனையோ தேவியான்செய்தேன்சும்மா
வித்தகன்றன்னிடம் விளம்புவாயென்முறையை
விரிஞ்சன்முதலோர்தொழும் விகசிதசுந்தரியே (அம்மா)

பூமியிலேயுன்னைப் போற்றுவோர்கதிசேர
புருஷகாரமாக புகலுந்தாய்நீயல்லவோ
ராமாநுஜதாசன் நாடினேனுன்நேசம்
ரக்ஷித்தருளுவாய் நாரணன்பதங்காண (அம்மா)

---

(14) இராகம்—கமாஸ் தாளம்—ரூபகம்.

சுஜனஜீவன என்ற மெட்டு.

பல்லவி.

பஜனை பாடுவோம் பக்தர்
பதத்தை நாடுவோம் ராம (பஜனை)

அநுபல்லவி

நிஜமதாகவே மிக சுஜனனுகியே
நெஞ்சமேமேநீயுங் கஞ்சநாபனைத் தஞ்சமென்றேயடைந்து ராம (பஜ)

சரணம்.

பாண்டுரங்கன் சேவைபரம பதத்திற்சேர்க்குமே
மீண்டுமுலகவாழ்வில் வருஞ்செனனம் நீக்குமே
வேண்டுவோர்தம்மை யாண்டிடும்ஜெக
ரக்ஷகனை வச்சுதன்பத மிக்ஷணமேயடைந்து ராம(பஜனே)

பூமின்நாதன் னுமமகிமை புனிதனுக்குமே
காமக்ரோதத்தா லெழுந்த கன்மம் நீக்குமே
காமவேள்தந்தை தன்னைக்
காணவேண்டிடில்
ராமாநுஜர் பாதாம்புஜம் நேமமதாயடைந்து ராம (பஜ)

சக்கரவர்த்தி திருமகன் விஷயம்.

இராகம்—தோடி. தாளம்—ரூபகம்.

பல்லவி.

தஞ்சம் தஞ்ச மென்றேன் ஹரி
தாமோதரனே யுந்தன் பாதாரவிந்த சேவை (தஞ்சம்)

அநுபல்லவி

தஞ்சம்தஞ்சமென்றே பஞ்சையான் கெஞ்சுறேன்
கஞ்சமலர்நயனுகாரும் நாராயணனே (தஞ்சம்)

சரணம்

அன்னைதன்சொற்படி யாரண்யமே சென்ருய்
அன்பாய்க்குகனுக்கு ஆதரவாய் நின்ருய்
நன்னயமாய்ச் சித்ரகூடத்திலே நின்ருய்

நவையகலும் முனதுதம்பி
பரதன்கொண்ட பாதுகைக்கு (தஞ்)

தண்டகாருண்யத்தர் கொண்ட மனத்துயர்
விண்டிடவே தேவரெண்டிசையுந்தொழ
கண்டகரெங்கு முருண்டிடவே கொன்ருய்
கருணுகரனேயுந்தன்
திருமாமலரடி நிதமும் (தஞ்சம்)

சாலவும் பக்தனும் சாதுவிபீஷணன்
சரணமென்றே வரத்தந்தாயிலங்கையை
பாலன்ராமாநுஜன் பாடினேனுன் நாமத்தை
பரமதயாநிதியரசே
பரமபதந் தந்தருள்வாய் (தஞ்சம்)

கண்ணன் விஷயம்.

(17) இராகம்—பைரவி. தாளம்—ஆதி.

பூபால சோ. என்ற—வர்ணமெட்டு

கோபாலனே ஸ்ரீராகவா உன்றன்
மாபாதமே தரவே வாருமே மனமகிழ்வுடனே
க்ஷீராப்திதனிலே துயிலுந்தேவா
பேராயிரமாலே எம்மானேவுயர் (கோபாலனே)

விந்தார்மனேயதனில் வந்தேயவதரித்து
சந்தோஷமாய் வளர் கோவிந்தாவுன்றன் கிருபை
தந்தாள்குவா யுன்தாளிணே உன்றன்
தாசன் ராமாநுஜன் மிகப் பூஜிதம் செய்தேன்
சீதாநாதனே
க்ஷீராப்திதனிலே துயிலுந்தேவா
பேராயிரமாலே எம்மானேவுயர் (கோபா)

திருமாலிருஞ்சோலை அழகர் விஷயம்.

(18) இராகம்—பைரவி. தாளம்—ஆதி.

ஸ்ரீ ரேகுவர சுகுணாலய என்ற மெட்டு.

பல்லவி

மா லிருஞ்சோலைமாயா நமோ திரு (மா)
மனமுவந்தருள்புரி மனோகரா (மா)

அநுபல்லவி

மாதாபிதா குருவும் நீதானல்லாது வேறு
ஆதாரமில்லை யுந்தன் பாதாரவிந்தமருள் (மா)

சரணம்

ஆகமரூபா அழகனெனுநாமா
மேகமளாவும் விடைநாகமென்னுந் திரு (மா)

சேமமிருந்த வுந்தன் நாமந் துதிக்குமைந்தன்
ராமாநுஜனையாள சீமானே வாவா திரு (மாலி)

திருவேங்கடமுடையான் விஷயம்

(19) இராகம்—நாதநாமகிரியை. தாளம்—ஆதி.

திருப்பரங்கிரிவாசா என்ற மெட்டு.

திருப்பதி மலைவாசா தினந்
திருமகள் மகிழ்நேசா......... (திருப்பதி)

திருப்பதந்தனிற்கங்கை திகழ்ந்திடுமீசா
தேவனேகௌஸ்துப மணிப்பிரகாசா
விருப்பமாயடியவர் வேதனைநாசா
விண்ணவர்தொழுதிடும் ஸ்ரீவெங்கடேசா (திருப்பதி)

கருப்பையிலடிக்கடி பிறவாமல்யானே
கண்ணனேயருள்புரி யினிச்சகியேனே
பொறுப்பதுன்கடனென்றன் பிழையெல்லாந்தானே
பொல்லாதபிள்ளையைத்தாய் வெறுக்குமோகோனே (திருப்பதி)

அன்பர்கள்பணிகின்ற ஆத்மசகாயா
அகிலமெல்லாம் வாரியுண்டசெவ்வாயா
முன்பொருநாள்தூதாய்ச் சென்றவுபாயா
மூர்க்கனுமடியனை நோக்குவாய்மாயா (திருப்பதி)

நன்குடனுன்திருப் பாதங்கள்நாடி
நாயேன்ராமாநுஜன் கீதங்கள்பாடி
துன்பமில்லாச்சாது சங்கத்தில்கூடி
துணைபெறவேயருள் வந்தனங்கோடி

இராகம்—கேதாரகௌளம். தாளம்—ரூபகம்.

(20) ராமநாமமே தெய்வீக என்ற மெட்டு.

பல்லவி.

சீதைநாதனைராமன் பாதமேபணிவோம்
ஜெகதலம்புகழும் ஸ்ரீ (சீதை)

அநுபல்லவி

மாதவஞ்செய்ஜனகனுமுத
மண்ணினில் வண்ணமாய்
மாமகளெனவரும் (சீதை)

சரணம்

அன்று முனிவன்செய் யாகத்தைக் காத்தும்
அழகிலாக்கியைக் குலையவே மாய்த்தும்
சென்றுவகலிகை சாபத்தைத் தீர்த்தும்
ஜெயப்பெற வியப்புற
சிவன்வில்லை யொடித்த நம் (சீதை)

சிற்றன்னை சொற்படிசீராய் வனஞ்சென்று
தீதில் முனிவர்கட் காதாரமாய் நின்று
பற்றலராகிய பாதகரைக்கொன்று
பாரினில் தீரனாய்
பண்புடன் ஜெயம்பெற்ற (சீதை)

அண்டர்கள்போற்ற வயோத்திநகர் வந்தாய்
ஆதரவாய்முடிசூடியே யுகந்தாய்
தொண்டன் ராமாநுஜ தாசனுன்னரவிந்தத்
துணையடி தனிலுற
துயரில வரமருள் (சீதை)

---

(21) இராகம்—கரகரப்பிரியை. தாளம்—ஆதி.

விடமுசாயவே என்ற வர்ன மெட்டு.

பல்லவி

ஹரியின் திருநாமமே.........நா மன்புடனறை
வோமே மனமே தினமே (ஹரியின்)

அநுபல்லவி

திருமா..............மகளா
ரிலகும்மார்பன்
தீவினை தீர்த்திடுந்தீன தயாபரன் (ஹரி)

சரணம்

ஆழ்வாராதிகளறைந்திடுந் திருநாமம்
ஆசகல்மலரய னறைந்திடுந் திருநாமம்
பாச பந்தமகை
தீர்க்கும் நாமமிதே
பாலன் ராமாநுஜன் பகரும்நாமமிதே (ஹரியின்)

---

(22) இராகம்—அடாணு. தாளம்—ஆதி.

பொன் கோதண்டா என்ற வர்ணமெட்டு

ஜெய ஸ்ரீரங்கா சிறியேன்றனக் கிரங்காய் (ஜெயஸ்ரீ)

வயல்சூழுங்கா வேரி நாரி
வந்தோடுஞ்செந்தாளா சிந்தூர லங்கார தீர (ஜெய)

துய்யா கண்பாரும்மாசு
மெய்யா பண்பாக நாகம்
உய்யவங் கோடிவந்த
உத்தண்டவீர கோதண்டராம (ஜெ)

அன்பா யாழ்வார்கள் பாடும்
நன்பா சுரங்கள் நாடும்
பொன்தேவி கூடியாடும்
பொற்பாதநாத பத்தாவதார (ஜெ)

சிங்கார வேணுகான
மங்காத ஞானமான
ரங்காவென்றே துதிக்கும்
ராமாநுஜன்றன் பூஜாநுகூலா (ஜெ)

விருத்தம்.

மஞ்சுநிகர் வடிவானே மறையுருவாய்
நின்றானை மடுவிலன்று
குஞ்சரத்தின் றுயர்தீர்த்த கோமானைக்
குற்றமற்ற குணங்கொள் கோனை
விஞ்சுபுகழ் நிறைந்தானை விரிஞ்சனையுந்
தந்தானைவிரிந்த பூதம்
பஞ்ச வடிவானவனைப் பரமன்றன்னைப்
பணியாத நாளெல்லாம் பவஞ்சூழ்நாளே

(23) இராகம்—ஆபேரி. தாளம்—ஆதி.

நகுமோமு என்ற வர்னமெட்டு.

பல்லவி.

ரகுராமாவுனையேபணி நாயேன் றனக்கருளே
நலனேநிறைதிருமாமகள் நாடும் சுபகரனே (ரகுராமா)

அநுபல்லவி.

ஜெகமீதினி லுனையேநிக
ரொருதேவருமில்லை
குகனாகிய வேடனையே தழுவுங்
குணனேமிகு சற்குணனே (ரகுராமா)

சரணம்

சீமானனு மானுக்கருள் செய்தபரிபாலா
பூமாதுடன் பூவிலமர் பூவைபுணர்சீலா
நேமாஜெயராமரகுராமா பரந்தாமா
ராமாநுஜதாசனை யாளவேநீ வருவாயிது தருணமே. (ரகு)

---

(24) பட்டாபிஷேகத்தைவிட்டு என்ற மெட்டு.

கேசவனேயுன் றன் தாசனுன்பாதாரம்
நேசித்துயானுய்ய வாசைகொண்டேன் ரிஷி
கேசனே நீவருவாய் ஜெக
தீசனேயருள்புரிவாய்
கெஞ்சினேனே
செஞ்சரண
நெஞ்சமுந்தான்
கொஞ்சமேனுமிரங்கே (கே)

அத்திக்குமுத்திதந்த வித்தகாவுன்னை
நத்தியுன்னாமத்தை நித்தமென்சித்தத்தில்
வைத்தே னன்புகூடவே என்றனை
சுற்றும் வினையோடவே
வரந்தருவாய்
நிரந்தரனே
சிறந்துயரும்
வைகுந்தவாசகனே (கே)

ராமாநுஜன் போற்றும் நேமாரவிகுல
சோமாஜெய ஜெயராமா பரந்தாமா
காமவேள் தன்றந்தையே ஆயிர
நாமமுறு மெந்தையே
காரணனே
பூரணனே
ஆரணனே
காத்தருள் நாரணனே (கே)

---

(25) இசைந்த சூலம்—என்ற திருப்புகழ் மெட்டு.

இலங்குசெம்பொன் முடியொடு கவினுரு கரமீதில்
இணைந்து ரவியுமிந்துவும் வந்தமர்ந்தது போலே
துலங்கு திகிரியும் நந்துடன் வம்புறு வனமாலை
நலங்கொள் தாமரை மின்னையு மேயணி மணிபார்பா
உயர்ந்தவுரியினிலே யுருவெண்ணெயுந் தயிர்பாலும்
உகந்துமேயதை யுண்டவனே யென் வினைதீராய்
நயந்து பாடியகாயன் ராமாநுஜ னடியேனும்
வியந்து நின்றுதிபாடவு மருள்புரி பெருமாளே

---

(26) இராகம்—தன்யாசி. தாளம்—ரூபகம்.

காமசுந்தராங்கி என்ற வர்னமெட்டு

பல்லவி.

ராமச்சந்ரனேயுனது ரமணீகர
பதமதுபெற வரமருளினி (ராம)

நம்பினேனனுதின முன்றன்
செம்பொன்மலரடியிணை ரகு (ராம)

நந்தியே பத்தர்கள் நித்தமும்
சுத்தமனத்துடன் போற்றிடும் (ராம)

நற்றவர் மகிழுற்றிடவே
துர்க்குணர்க்காய் விற்பிடித்த (ராம)

நலமுறுபலகலனணியுங்
குலமடந்தைஜனகி நாதா (ராம)

நாடினேனுன் பாதசேவை
தேடினேன் தினந்தினம் ரகு (ராம)

அநுபல்லவி

பூமன்தந்தை யாகுந்தேவா
புண்யனே வுன்புகழறிவா ரொருவருமிலை (பூம)

பொங்கும்மங்களகரனே
சங்குசக்கரக்கரனே (பூம)

கண்ணனென மண்ணில்வரும்
அண்ணலேமணி வண்ணனேரகு (ராம)

சரணம்

வண்டுளப மாலையோனே
வாசமாமலர் மங்கைதன்கோனே
தொண்டன் ராமாநுஜ
னுன்துதி செய்தேனே

துயரறுசுடரடி பெறவரு
ளரிகரியிது ததிவரமருள் (ராம)

(27) நாதசங்கீதபோன் மணிமண்டபம் என்ற மெட்டு.

வேதவித்தாரனே விகசிதனே
வேண்டிநின்றே னருளுஞ்சுதனே
வேலைநடுவினிற் றுயின்றவனே
வேங்கடகிரியினில் நின்றவனே
வேணுக்ஞா வேணுக்ஞா
வேதனையின்றேனே வேணுக்ஞா (வேத)

சுத்தர்கள்படிகின்ற துய்யகோனேரியில்
சுகமுடனடியனும் வகுலியாகி
நித்தமும்வருகின்ற பத்தர்பதநீர்
நீசனுனருந்திட வரமருளே
நீலவர்ண நீலவர்ண
நின்மலரூபனே நீலவர்ண (வேத)

காமமயக்கந் தன்னிலேமூழ்கி
கவலையுற்றிடுமென்னைக் கரையேற்றி
ராமாநுஜனும் வந்துன்னடிசேர
ரக்ஷித்தருளுவாய் ரமணீசரா
ராகவனே ராகவனே
ராதைமகிளுந்திரு ராகவனே (வேத)

---

(28) பவணகிரியதனிலுறை என்ற மெட்டு.

திருமலையின் மீதிலுறை
தேவனே மகானுபவா (திருமலை)

மருமலர்களேநிறைந்து
மாக்ஷிமையுடன் காக்ஷிவிளங்கும் (திருமலை)

(தொகையறு)

திருவுறும்மதலை பிரகலாதனுக்காகவே
சிம்மமாய் வந்த பூமா

சிறியனான் சொலுமுறை தனிலுறுங் குறையதைத்
தீர்த்துமே பாரும் ராமா

(பாட்டு)

சித்தர்முத்தர் போற்றும்நேமா
சிங்காரகுண னேசோமா
நித்தம் ராமா னுஜதாசன்
நின்கழல்தனைத் துதித்தேன் (திருமலை)

---

(29) புவிதாசுடநீ என்ற மெட்டு.

பல்லவி.

மதுசூதனா யினி மேலும் நீ
மைந்தன்மீதினில் வர்மமாகுமா (மது)

அநுபல்லவி.

இதுமாறிடி வினிவேறு வேறு
எந்தஜென்ம மோவந்து சூழுமோ (மது)

சரணம்.

சாலவும்புகழ் தங்கும்ஸ்ரீனிவாச
சரணாம்புயந் தந்துபாரும் நீ
ஞானரூபனே மெஞ் ஞானரூபனே
நம்பினே னுன்னை நாயேன் ராமானுஜன் (மது)

---

(30)

சரிசரி சாமுத்ரிகா லட்சணம் என்ற வர்னமெட்டு.

அருள்புரி அடியேனை யாதரித்து (அருள்புரி)

திருமாதுடன் வருவாய் பதம்
தருவாய் நரஹரியே நிதம் (அருள்புரி)

ஆயர்குலங் தன்னிலே தான்சேய ஞகவந்து நீ
அண்டர்முதலா யுயருந்தொண்டர் சொந்தபந்து நீ
ஆதிமூலனே அசோதைபாலனே
அருள்ஞானமுந் தெரியாததோர்
நரனுகிய சிறியோனுக் (கருள்புரி)

பண்டுகாலந் தன்னிலேதான் பாவமென்ன செய்தேனே,
தண்டுளப மாலையோனே தமியன்மீதுவாதேனே
பரந்தாமனே பலநாமனே
பலநாளுமே ஜெகமீதினி
னியாகிலும் பிறவாமலே (அருள்புரி)

சேஷன்மீதி லேதுயிலு மீசனேகண் பாருமே
தாசனுகச்செய் தடியேன் தோசமதைத் தீருமே
தஞ்சமய்யனே மஞ்சுமெய்யனே
தரமீதினில் திருமாதுறுங்
கரிராஜனே வருவாய் நிதம் (அருள்புரி)

கோலமா யவனியை யிடந்தபரி பூரணு
பாலன் ராமானுஜ தாசன்போற்றுந் திருநாரணு
பத்தர்நேசனே கண்பாருமீசனே
பதமீதினி லிதமாகவே
நிதமேவியுன் சுதன்யானுய்ய (அருள்புரி)

---

(31) கருவினுருவாகிவந்து என்ற திருப்புகழ் மெட்டு.

நரஜெனன மேயெடுத்து
புவியதனி லேவளர்ந்து
நடைகள்மிக வேநடந்து மிகவேதான்

பெருமையென மாதர்தங்கள்
குவிமுலையி லேயணைந்து
புரிகலவி யேமிகுந்து பவமாகி

ஹரிஹரிநமோ நமென்று
துதிமிகச்செய் யாமல்நின்று
அருநரக மேயடைந்து அழிவேனோ

உரகசயனா வுனையே
யொரு பொழுது மேமறவே
னுயர்பதவியே யருள்வாய் திருநாதா

கருமைநிற மேனியவுன்
அருமைதிரு வடியை நிதம்
பெருமையுட னேயருளும் ஜெகதீசா

சிறியன்ராமா நுஜன்மொழியும்
பிரியமுறு மோரிசையில்
அருள்புரிந்து மேநவைகள் தமைத்தீராய்

நறுமலர்க ளேமிகுந்த
பொழில்களுறு வேங்கடத்தில்
திறமையுட னேயெழுந்த பெருமாளே

---

32. இராகம்-ஹமிர்தவாகினி-தாளம்-ஆதி.

ஸ்ரீராம பாதமா என்ற மெட்டு.

பல்லவி.

ஸ்ரீரங்கநாதனே சீர்கங்கைபாதனே
சீதாமனோகரனே (ஸ்ரீ)

அநுபல்லவி.

கோரினவரமே கொடுத்தருளையனே
கொண்டல்படி தென்னரங்கந்
தன்னிலே பள்ளிகொள்ளும் (ஸ்ரீ)

சரணம்.

பாரினிலேயுன்றன் பதந்தனைத்துதிசெய்வோர்
பரமபதந்தனில் பண்புடனுய்குவார்
பார்மகள்நாதனே பாதாரவிந்தந்தந்து
பாலன்ராமானுஜ தாசனையாளுமே (ஸ்ரீ)

---

33. எனை ஆண்டவா—என்ற மெட்டு

ஸ்ரீமந் நாரணா நாளும்வரமருள் பூரணா
நாதா பொற்பாதனே
சீதா சமேதனே நாளும் வரமருள்பூரணா (நாரணா)

வாரணமழைத்திட வந்தருள்செய்த
வரதா வரதா வரதா வரதா
வனப்பு மிகுத்த தனத்தை யுறுநப்
பினைக்குன் மயலால் மனத்தை யுருக்கும் (நா)

ஆரண ரூபனே யன்பருக் கெளியனே
ஹரியே ஹரியே ஹரியே ஹரியே
அத்தியின்மத்தியில் நித்திரை செய்திடுஞ்
சுத்தனே பத்தனும் நத்தினே னித்தினம் (நா)

பாண்டவர்க் கன்றளில் பாரதம் முடித்தாய்
பரனே பரனே பரனே பரனே
படிக்குள் ஜெனன மெடுக்கும் விதத்தைத்
தடுத்துன் பதத்திற் கிடக்கும் படிக்கு (நா)

தொண்டன் ராமாநுஜத் தொழும்ப னுன்மலரடி
தொழுதேன் தொழுதேன் தொழுதேன் தொழுதேன்
தொலைவில் முனிவர்பலரும் வணங்குங்
கலைகள்வடிவே யுலகின்னலனே (நா)

---

(34) இராகம்—நாதநாமக்கிரியை தாளம்—ஆதி

மனமேஹரி திருமலரடி நினைதினமே என்றன்
ஜீவரத்தினமே (மனமே)

தனமாதராசையில் நிதமுந் திரிந்துமே
தவித்து நீ மயங்காதே துஷ்ட
கனகனைப் பிளந்தநம் கரியவன் பதத்தைநீ
கனவிலும் மறவாதே (மனமே)

சாரமில்லாத சம்சாரவாழ்க்கையிது
சதமென்று நம்பாதே மிகத்
தீரனும் ராவண காதகனைச் செற்ற
ராமனை மறவாதே (மனமே)

தீதானகாரியங்களேதாகிலும்புரியத்
திரிந்து நீ யலையாதே வுயர்
வேதாமுதலோர்தொழும் பாதாரவிந்தங்களெப்
போதும் நீ மறவாதே (மனமே)

இதரதெய்வங்களைத் தொழுதுநீ யடிக்கடி
இச்சென்ம மெடுக்காதே பரம
பதத்தினிற் சேர்த்திடும் பாத்துவ மூர்த்தியின்
பதங்களை மறக்காதே (மனமே)

கோலமுறுந்திருக் கோவலூர் ஜீயர்பதங்
கோரிநீ தொழுவாயே சிறு
பாலன் ராமாநுஜ தாசனை யாட்கொண்ட
பட்டரைப் பணிவாயே (மனமே)

———

35. செந்தூர் வேலாண்டி—என்ற மெட்டு

கண்ணு வுனைவேண்டி னேனே
காமந்தாண்டி...டி (கண்)

மண்ணிலுனைநாடி
யெண்ணிப் பஜனைபாடி
மருவும் பொதுவர்க
ளிரவு பகலிலும்
பிரிய முடன் றுதி
புரிய மகிழ்வுறும் (கண்)

மலையை யொருகர
மலரில் நிறுவியே
பலரும் மகிழ்வுற
நலனையுதவிய (கண்)

அலைகளுருநதி
யதனிலுறுபணி
தலைகள் தொறுமிக
நடன மிடுதிருக் (கண்)

சங்கு சக்கரக்கையா
சரணம் சரணம் ஐயா
சந்ததமுந்தனை
வந்தனை செய்திடும்
மைந்தன் ராமாநுஜன்
சிந்தையில் வந்தருள் (கண்)

---

36. பத்திசாதிக்கவிடாது—என்ற மெட்டு

ஸ்ரீரெங்க நாயகமே வாரும் உன்றன்
சிறியேனுக் குன்றன்பதந் தாரும்
சீரெங்குமே பொங்கும் சீதேவிநாதனே
சித்தம் மிகமகிழ்ந்துன் பத்தனைப் பாருமே (ஸ்ரீ)

சங்குசக்ரம் கொண்டபரந்தாமா சிவன்
சாபமதை யேயொடித்தராமா

மங்குல்நிற மேனிமாயா வாயிரநாமா
மதுசூதனா வென்றன் மீதுவர்மமாமா (ஸ்ரீ)

அன்னை யசோதைதன்றன் சேயா நல்ல
அடியார்க்குன் கதியருளுந்தூயா
தன்னிகரில்லாதப் பின்னை தன்றன்னேயா
தாரகனுமனே சரணமென்றேனையா (ஸ்ரீ)

நான்குமுக மாகியுள்ள வேதா தன்னை
நாபியிலே பெற்றஞான போதா
மாங்குயில்பாடுகின்ற மாகோயிலுறுநாதா
மைந்தன் ராமாநுஜன் வணங்கும்மாமலர்ப்பாதா (ஸ்ரீ)

திருக்குறுங்குடி நம்பிவிஷயம்.

37. தினந்துதிப்பாய் நெஞ்சே — என்ற மெட்டு

பல்லவி

திருக்குறுங் குடிவளர் தேவனே வாவா

அநுபல்லவி

தேவனே வாவா தினமெனைக்காவாய் (திரு)

சரணம்

மருக்கமழ் பாதா
மைந்தன்மேல் வாதா
மறுவிலாக் குறுங்குடி மாதாவின்நாதா (திரு)

பத்தர்கள் சீலா
பரமனே மூலா
பஞ்சநம்பிகளெனப் பகர்ந்திடும் லோலா (திரு)

ஞாலமேல் நிறைந்தாய்
நான்மறை யுறைந்தாய்
ராமாநுஜ ராலுந் திவ்ய ரகசியம் தெரிந்தாய் (திரு)

ராகம்—கதனகுதூகலம் தாளம்—ஆதி

கதனகுது கலராகப்பிரியே—என்றமெட்டு

பல்லவி

38. கதியேதா இதுவேளை தானே
கண்ணனே நீ வாவா
கருணைசெய் தேவா (கதி)

அநுபல்லவி

மதுசூதனே ஸ்ருதிரூபனே
மங்களந்துலங்கு மெங்கள் துரை ரங்கா

சிட்டாஸ்வரம்

மாதவ கேசவ சீதரனேமிக
ஆதரவாயுன திருபதமனுதினம்
மனமதில் நினைந்திடுஞ் சுதனது துனிகெடும்
படியினிதுடன் வரமருளிது ததியினில் (கதி)

செந்திருவின்நாதா
செங்கமலப் பாதா
மைந்தன மீதில் வாதா
வந்தருள்செய் நீதா

நந்தணிகரா நல்வசீகரா
நாயேன் ராமா நுஜன்
நம்பும் ஞானபோதா (கதி)

---

39. இராகம்-இந்துஸ்தான்காபி தாளம்-ஆதி.

'கந்தா காருண்யனே என்ற மெட்டு.

கண்ணா காவாயென்னை
கருணாகரனே
விண்ணோர் துதிபதனே
வெகுசோபிதனே (கண்ணா)

வேலைமீதினி லேதுயின்றருள் வித்தகா பரிசுத்தனே
வேளைநீயே பாருமென்றனை வேதன்முதலினோர் த்தனே
விந்தைநாயகனே
விடைவெற்பினனே
கந்தாளுன்பதமே
தயவாய்நிதமே
தாசன்ராமா நுஜன்போற்றும் நேசனே ஜெகதீசனே
வாசமாமலர் மாலையணி ரிஷிகேசனே ஸ்ரீனிவாசனே (கண்)

விருத்தம்.

அண்டர்கள் போற்றிடுங் கொண்டல்நிற மேனியுறு
மச்சுதா பாண்டுரங்கா
ஆதிமத்யாந்தனே சோதியே ரகுராம
அய்யனே துய்யபாதா
மண்டலந் தன்னையே யுண்டுமிழ்ந் திட்டவா
மாதவா வாசுதேவா
மலர்தனிற் றங்கிடுங் கமலையை மகிழ்வொடு
மார்பினி லணைத்த தேவா
கண்டகர் மடியவே கண்ணனாய் வந்துமே
கம்சனை வதைத்த பின்னும்
கல்யாண குணமான லீலைகள் பலசெய்த
கர்த்தனே பத்ம நாபா
எண்டவர் தொழுதிடுந் தண்டுளப மார்பனே
யேழையைப் பாருமையா
எங்கும் புகழ்ந்திடும் ரங்கந் தனில்தங்கு
மெழிலான சோதி மணியே.

---

40. சேந்தாளம்பூந்தேன்கமழும் என்ற மெட்டு.

செந்தாமரையில் வந்தேயமரும்
திருமகளணி மார்பனே (செந்)

அந்தமாய் வந்தடியோர்
அஞ்சலிக்குஞ் சேவடியோன்
அம்பரமீதுறு
உம்பர்களேபணி
எம்பெருமானே
நம்பினேன் வாவா (செங்)

மாயா ஆயா நேயா தூயனே
மண்ணை யுண்டுமிழ்ந்த வாயனே
வேயூதுவோ னேநேரும்
சேயோனையே நீர்பாரும்
வெங்கரிதான்படும்
சங்கடம்நீங்கவே
துங்கமுடன்வந்த
ரங்கனேவாவா (செங்)

அன்றுயர்க்கு மால் குன்றேயெடுத்து
அன்பாய்க் குடையாய்ப் பிடித்தவா
சென்றுவினிரைகள் மேய்த்தாய்
கன்றுய்வந் தோனை மாய்த்தாய்
ஜெகதலந்தனில்
நகமெனப்படும்
பகடுதைத்துமே
யகமகிழ்ந்தவா (செங்)

பாலன் ராமாநுஜன் மொழிக்குச்
சீலமாக வுகந்தவா
வேலைதனையே கடைந்தாய்
ஞாலமதையே யிடந்தாய்
வித்தகாவுன்னையே
நத்தினேன்யானுமே
இத்ததிவந்துமே
பத்தனையாளுமே (செங்)

(41) பண்டிதமோதிலால் நேருவை—என்ற மெட்டு

பண்டரி புரியில்மேவும்
பக்தர் நேசனே
பக்தர் நேசனே கண் பாரும் ஈசனே (பண்)

அண்டர்களெல்லாம் புகழும்
ஆரணங்கள் தான்மகிழும்
கொண்டல் மேனி மாதவனே
கோரிவந்தேனே
கோரிவந்தேனே் முறை கூறி வந்தேனே (பண்)

தொகையரு

ஆதியில்மூலமென வோதிடும் யானையையன்புடனுதரித்தாய்
அருமதலைபிரகலாதனுக்காக வேதூணிடம் யரியுருவாயவதரித்தாய்
சோதிவடிவாயெங் குந்துலங்கிடும் ரூபனேசுத்தசை தன்யவடிவே
சுந்தரமிகுந்திடுஞ் செந்திருவின் நாதனே சுகுணமுறுதேவாதேவா

பாட்டு

பத்தர்களுக்காகவென்று
பாண்டுரங்கனுக நின்ருய்
வித்தகனே வேண்டிவந்தேன்
வேணுநாதனே
வேணுநாதனே ஆள வேணுப்நாதனே (பண்)

மண்டலத்தையேயளந்த
மாதவனே யுனது சொந்த
தொண்டன்ராமாநுஜதாசன்
துன்பம்நீக்குவாய்
துன்பம்நீக்குவாய்யுன்றன் அன்பனுக்குவாய் (பண்)

42. தசரதராஜகுமாரா—என்ற மெட்டு

திருக்குருகூர் வளராதி வுயர் சோதி
தனைப்ரீதி யுட னோதி (திரு)

திருக்குடனே செய்யுந் தீவினை யோட்டி
தினமனமவன் றிருவடிகளில் நாட்டி
உருக்கமாயுறுந் திருவாய்மொழிக்கோட்டி
உத்தமர்தன்னுடன் நாமே கூடு
வோமே சுகந்தாமே பெறலாமே (திரு)

அவனன்றிவேறே யாதரவில்லை
அன்னிய தேவதையால் வருந்தொல்லை
தவமிகு மாழ்வார் தந்திடுஞ் சொல்லை
சந்ததம் சிந்தனை நாமே
செய்வோமே சுகந்தாமே
பெறலாமே (திரு)

மாறன்மதுரகவி வணங்கிட நின்றோன்
மகிழ்வுடன் தண்டக வனமதிற் சென்றோன்
வீறுடன் பாதகர் வீழவே கொன்றோன்
வித்தகன் பதமதில் நாமே
பணிவோமே சுகந்தாமே
பெறலாமே (திரு)

ஞாலமீரேழையும் நலமுடனுண்டோன்
நான்மறைதனைமல ரயனிடம் விண்டோன்
பாலன் ராமானுஜ தாசனை யாண்டோன்
பல்லாண்டு பாடுவோம் நாமே
மகிழ்வோமே சுகந் தாமே
பெறலாமே (திரு)

43 பாபுவிபினச் சந்திரபாலன்—என்றமெட்டு

கண்ணிகள்

ரகு ராமச்சந்திரன் பாதம் தினம்
நம்பினோர்க்கது வேதம் உயர்
நாரதாதிக ளோரதாய்நமஸ்
காரமேசெயும் பூரணன்ரகு (ராம)

தொகையரு

அண்டர்தம் துயர்தீரவே அயோத்திமா நகரில் வந்
தவதாரம் செய்தபுண்யன்
அவனிமாதாபடுங் குறையது நீங்கவே
யசுரரைத் தொலைத்தநண்யன்

கண்ணித்தொடர்

அகில முழுது முண்டோன் பொறி
யரவினிற்றுயில் கொண்டோன் ஒரு
ஆலிலைதன் மேலதாய்ச்சிறு
பாலனாய் வருங் கோலனாம்ரகு (ராம)

தொகையரு

மானாகவந்த மாரீசனென்போனை
மண்மேல் வதைத்த நாதன்
மாதேவி சீதையை மனமது மகிழ்ந்துமே
மார்பினிலணைந்த நீதன்

கண்ணித்தொடர்

மஞ்சுநிகர்த்த மெய்யன் அருள்
விஞ்சுமாமலர்க்கையன் உன்றன்
மைந்தன் ராமாநுஜனுந் தொழுதேத்திடும்
சிந்தையில் வந்திடு யந்தமிகுந்திடும் (ரா)

காளிங்க நர்த்தனம்.

44 பூம்பழனிநகர்—என்ற மெட்டு

தாம் தரிகிடத தோம் தணகு ஜெணுதா
தத்தாதரிகிட
தகர்தத்தரிகிட
தகுதிகுதரிகிட
தளாங்கு தகர்தத் (தாம்)

பொங்கும் யமுனைவந்து
தங்கும் காளிங்கன் கொந்து
பொற்புறு நற்றலை யுற்றிடு முற்பவ
மற்றிட நற்பதம் வைத்திடு மத்தகி (தாம்)

அந்தரத்தமார்கூட
விந்தையாய்த் தாளம் போட
அற்புத முற்றிடு வித்தகன் நற்ஜெதி
தத்தகு தரிகிட தகஜெணு தரிகிட (தாம்)

ராதை மணுள ஞேட
ராமாநுஜ தாசன்பாட
ரம்பையர் மங்கள மன்பொடிலங்கிட
வெப்பணி துன்பமகன்றிட—நின்ருடும் (தாம்)

---

45. என்ன சிங்காரமே என்ற மெட்டு.

என்னவொய் யாரமே—ஸ்ரீராமச்சந்திரன் சேவை
என்னவொய் யாரமே (என்ன)

தன்னிகரில் சீதையுடன்
புன்னகையாய் நின்றவெழில் (என்ன)

ஆதியினில் மூலமென்ற யானைதொனிக்காகவே
அன்புடனே யோடிவந்தா ரம்முதலை சாகவே
ஆதியந்தமில் லாஜெகதீசன்—சர்வ
அண்டங்களை யுண்டுமிழ் சர்வேசன்
சோதிமணி மகுடம்
சுந்தரத்துட னணிந்தோன் (என்ன)

பச்சைநிற மேனியுள்ள ரக்ஷகனென் போனிவன்
இச்சையா யவதரிக்கு மிறையவனென் போனிவன்
பார்முழுதுமோ ரடியாலளந்தோன்
பாதகனுங் கனகனைப் பிளந்தோன்
நச்சராவணை யுற்றோன்
மச்சாவ தாரங் கொண்டோன் (என்ன)

பூமன்முதல் யாவர்களும் போற்றும் ரகுநாதனும்
புகலரிய மேன்மைதரும் புண்டரீகப் பாதனும்
பூதகிமுதலி னோரைக்கொன்றோன்—இந்த
பூவுலகமெங்கணு மேநின்றோன்
ராமானுஜ தாசன்பணி
தாமோதரன் பாதசேவை (என்ன)

———

46. கண்ணபிரானென்னவே யிக்காசினியிலவதாரம் என்ற மெட்டு.

கண்ணபிரான் ஞமமதை யெண்ணுவோந் தினம்நாமே அது
நன்னெறியுமாமே முன்
காலவினை போகுஞ்சென்ம சாபல்யமுமாமே (கண்)

எண்ணரிய வஞ்சகர்க ளெங்கணு மேயாக—உலகில்
வெங்குணங்களாக மிக
ஏதமுறும் பாதகரைச் சேதித்தா னுயிர்போக (கண்)

இந்திரனு ரேழுமுகி லந்தரத்தில் விடுத்தார்—ஆயர்
நெந்துசிந்தை துடித்தார் உய
நிறையவனும் பாயன்மலை யேந்திமழை தடுத்தார் (கண்)

ராதைநாதன் பாதங்காண நாளும் வருவீரே—மிக
ஆதரவாய்நீரே பாலன்
ராமானுஜ தாசன்பாடலை ரக்ஷித்தாள் வீர்நீரே (கண்)

---

47. வெள்ளிமலை யோத்தபலமேடை என்ற வர்னமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

ஹரியன்றி தெய்வமில்லை யென்று நீங்கள்
அடியுங்கள் ஜெயபேரி யின்று மிக
அன்புடன் பஜனைபல
இன்பமுடனேசெய்வீர்
நீரே மகிழ் வீரே.

ஆரணத்தின் வடிவான ஆதி அவ
ரங்குமிங்கு மெங்குந்தங்குஞ் சோதி நம
தல்லலையகற்றிடுவான்
கல்லையும்பெண்ணாகச்செய்தோன்
தானே பெரு மானே

பங்கயன் முதலினோரைப் பெற்றோன் துஷ்ட
ரெங்கணு மிருக்கொணாமல் செற்றோன் உயர்
சங்குடனே சக்கரத்தைத்
துங்கமுடனேதரித்த
மாயன் அன்பர் நேயன்

எல்லோரும் நிதம்நிதங் கூடும் திருப்
பல்லாண்டு தன்னையேநீர் பாடும் எழில்
ஏந்திழையாள் துரோபதைக்குப்
பூந்துகில் கொடுத்தருளும்
ஐயன் மலர்க் கையன்

கஞ்சமலர் மாதையணி நாதன் மது
கைடவர் தமையழித்த சூதன் வான்
மஞ்சுநிகர் வண்ணன்றிரு
செஞ்சரணந் தன்னைநாமும்
பணிவோம் நித மணிவோம்

செய்யதிரு வடிதனைத் துதித்து நாளும்
மெய்யதாக வேமனதிற் பதித்து சிறு
சேயன்ராமானுஜன்சொன்னேன்
மாயனைவினைகள்தம்மைத்
தீர்ப்பார் நம்மைக் காப்பார்

---

48. மனசு கருகவே என்ற மெட்டு.

இராகம்-ஹம்சத்தொனி. தாளம்-ரூபகம்.

பல்லவி.

திருமகளணி மணிமார்பன்
திருவடி பணிவாய் மனமே (திருமக)

அநுபல்லவி.

நறுந்துளப மலரணிவோன்
நாராயண னெனுநாமன் (திருமக)

சரணம்.

சுரர்முதலோர் முறைகூறிடக் குறைநீக்கிய துரையாமவன்
மறைநான்கையும் விரிவாகவே திருவாய்மலர்ந் தருள்தீரன்
அருள்நிறையும் திருநயனன்
ஆழிசங்கு நாதனை (திருமக)

திருக்காவிரி யிடைநின்றவன் செருக்களத் தவுணரைக்கொன்றவன்
திருமங்கைமன்னன் காதினில்திருமந்திரம் தனைப்புகன்றவன்
சிறைக்கரு டன்புயமீதில்
சீராயெழுந் தருள்வோனும் (திருமக)

49 ஐந்துகரனுக்கிளைய என்ற மெட்டு.

விந்தைமகிழ் வுக்கினிய
வேதவடி வானவனே
சிந்தைக் குகந்தவனே மனமே
சேவடிகள் போற்றுந் தினமே (விந்)

ஐந்துபொ றிநடுவே
அறியாமல் நீகிடந்தே
வெந்துமிக வாடினுலே மனமே
வெய்யகு ணஞ்சேருந் தினமே (விந்)

பந்தபா சங்கடந்து
பரமனடி கள்சேர
சந்ததம்பஜனை செய்குவாய் மனமே
சற்குணமுஞ் சேருந் தினமே (விந்)

பக்தர்க ளடிப்பொடி
பாலன்ராமா நுஜ தாசன்
சித்தமகிழ்ந் தேயுரைத்தேன் மனமே
சேர்ந்துமிகப் பாடுந் தினமே (விந்)

---

50 ராகவாநின்னு நம்மினவாடனுரா என்ற மெட்டு.

இராகம்-கமாசு-தாளம்-ஆதி.

பல்லவி.

நாரணனுவனே நம்பினே னருள்புரிவாய் உயர்
நளினமின் தரமணி (நாரண)

அநுபல்லவி.

நாரந்தனிலேமிகச் சீராயனந்தன்மிசை
யோய்த்திருக் கண்வளர் பேராயிரனே திரு (நாரண)

சரணம்.

வெங்கயந்தான் படுகின்ற சங்கடத்தை நீக்கவேதான்
துங்கமுட னேடிவந்த சங்கு சக்கரனே
எங்கணும் புகழ்மிகுந்து மங்குல்படி சோலைதென்ன
ரங்கமதில் தங்குகின்ற ரங்காரங்கா வென்றுதிரு (நாரண)

ஆசகல்மல ரயனுமீசன் வாசவன் முதலோர்
நேசமுட னேதுதிக் குஞ்சேஷ கிரியில்
தாசர்களுக் காகவேபிர காசமுட னேயெழுந்த
தோசரகிதனே ஸ்ரீனிவாசனே வரமருளும் (நாரண)

குஞ்சரக்கிரி தனிலேவிஞ்சி யருளாளனெனும்
ரஞ்சிதனே யுன்றனிரு கஞ்சமலரே
நெஞ்சதனிலே நினைந்துன்மஞ்சன் ராமாநுஜதாசன்
தஞ்சம்தஞ்ச மென்றுநிதங் கெஞ்சுகின்றேன் வாவா திரு (நா)

---

51 கையில்பணமில்லாமல் கலவிசெய்யவந்தீரோ என்ற மெட்டு.

இராகம்-சகானா-தாளம்-சாபு.

ஆராவமுதேயுந்த னடியிணையல்லாது
அடியேனுக்கார்துணை ஹரியே-ஹரியே-ஹரியே

பேரானதெய்வமே பேரருளாளனே
பெரியபெருமாளான பெம்மானேநீவாவா (ஆரா)

பங்கயன்றனைப்பெற்ற பக்தவச்சலனேவா
பார்த்தசாரதியே நீ பரிவுடனேவாவா
சங்குசக்கரமேந்துஞ் சாரங்கபாணியென்றன்
சரமதசையில்வந்துன் சரணந்தரவேவாவா (ஆரா)

திருமலைவாசனே தெய்வநாயகனேவா
திருமூழிக்களத்தானே தேவபிரானேவா
கருமுகில்வண்ணனே கருணாகரனே வா வா
கல்யாணஜகந்நாத கண்ணனே நீ வா வா (ஆரா)

அந்தமிகுந்திடுஞ் செந்திருநாதனே
அடியேன்விண்ணப்பமதை யாதரஞ்செய்வாயே
சொந்தமிகுந்தவுன்றன் மைந்தன்ராமாநுஜன்
சொல்லும்முறைக்கிரங்கி யல்லும்பகலுங்காவாய் (ஆ)

---

52 மாத்தாட பாரதேஜே என்ற மெட்டில் பின்மகுடம்.

இராகம்-கமாஸ்-தாளம்-சாபு.

பல்லவி.

பங்கயமா மலர்ப்பாதா
பாண்டவ தூதா (பங்கய)

அநுபல்லவி.

பாவைருக்மணி சத்யபாமை மகிழும்நாதா (பங்)

சரணம்

எங்கும்புகழ்மிகுந்து திங்கள்குலத்தில்வந்து
தங்குந்தனஞ்சயற் கிலங்குந்தேரினிலன்று
சரமவழியினை யறியவுரைசெயும்
பரமபுருடனே கருணையுடனுன்றன்
தாசர்பதமதில் நீசனுமெனை
தோசம்நீக்கியே நேசமாக்கிடும் (பங்)

வேதவடிவானுய் விளங்கும்வேணுக்ஞானு
பாதாரவிந்தந்தந்து ஆதரிப்பாயுகந்து
பரமபதமதி லுறையுமரிகரி
சரணஞ்சரணமித் தருணமருள்புரி
பாலனுகியே ஞாலம்யாவுமுண்
டாலின்மீதமர் மூலகாரணு (பங்)

அகிலமெல்லாஞ்சென்று அருமறைபேசிய
அய்யன்ராமாநுஜ ரருளியபாஷிய

மதனிலுறுபொரு ளிதமதாகவே
துதிசெய்குழுவினில் நிதமுமருவிய
ஆதியேவுயர் சோதியேமிகும்
பிரீதியோடெனைப் பாதுபாருமே (பங்)

தசாவதார மான்மியம்

53. நாதவிந்துகலாதி என்ற வர்னமெட்டு.

(மச்சம்) வேதன்றன் கரமீதில் விளங்கிடும்
நீதிசேர் மறைநாலுங் கொண்டேகிய
பாதகன்மாள வேலைதனிற்சல சரமானாய்

(கூர்மம்) தீதிலா வமுதங்கடைந்த சுரர்
பீதிகொள்ளவு மாமலை சாய்ந்திட
ஆதரஞ் செயவாமை வடிவான வநுகூலா

(வராகம்) பாவியாகிய பொற்கண் ணன்மாளவே
மேவியேதரை முன்போல் விளங்கவே
பூவராகம தாகியெழுந் தருள் புவனேசா

(நரசிம்மம்) சாவிலா வரமேபெறு மிரணியன்
ஆவிபோ கவுமன்ப னுக்காகவே
தாவியே யுயர்தம்ப மதில்நர ஹரியானாய்

(வாமனம்) காசிபன் முனையாக வேவந்ததி
நேசமோ டுமகாபலி தன்னிடம்
யாசனைசெய் தண்டாண்ட மளந்திடும் நெடுமாலே

(பரசுராமன்) மோசமே நிறைமன்னர் மூவேழ்முறை
நாசமேசெய நானிலம் போற்றவும்
மாசிலாமறை யோர்சுத னாய்வந்தாய் மழுவேந்தி

(ஸ்ரீராமன்) அண்டர்யா வர்க்குந்துன் பந்தவிர்க்கவுங்
கண்டகன் தசக்கிரீபனை மாய்க்கவும்
கொண்டல் மேனியனாகவே தோன்றிய ரகுநாதா

(பலராமன்) மண்டலம்புகழ் மன்வசு தேவன்றன்
எண்டவம் மெனவே பலராமனாய்
தொண்டர்கள் தொழவே யவமேந்திய சுகுமாரா

(கிருஷ்ணன்) தீயனாகிய கம்சனைக் கொல்லவே
கற்கி மாயனாகிய மாமணி வண்ணவு
பாயமாய்க் கலிகாலந் தனிற்கற் கியுமாவாய்

(பொது) சேயனா கியராமா நுஜன்றனை
தூயனாக்கியுன் தொண்டர்கள் தன்னிடம்
நேயமாக்கியே நின்னருள் தந்திடும் பெருமாளே

ஆசிரிய விருத்தம்.

கொண்ட செல்வங்களும் பெண்டிரும் பிள்ளையுங்
கோலமாமிளமைதானும்
குலவிவரு சுற்றமுஞ் சலமதினி லெழுகின்ற
குமிழிபோலழியுமென்றும்
கண்டகன் வந்துயிர் கொண்டுபோய் விடுவதுங்
கருதியேயடியனேனும்
கரியதிரு மேனியுறு பெரியபெரு மாளேயுன்
கழலிணைகளபயமென்றேன்.
வண்டனா மெனையுன்றன் தொண்டர்கட் காட்படும்
வரமருளவேணுமையா
வடவேங் கடந்தனில் திடமாக நின்றிடும்
வரதனேவெங்கடேசா
முண்டகா சனைதனைக் கொண்டணைந் திடுமார்பா
முழுமுதற்கடவுளாகும்
முத்தனே சித்தனே யித்ததியி லருள்செய்மும்
மூர்த்திவடி வானமணியே.

54. ஹேச்சரிககா ரா ரா ஹே ராஜகோபாலா என்ற மெட்டு.

இராகம்-காம்போதி-தாளம்-சாபு.

பல்லவி.

எம்பெருமானல்லா லெவ்வுலகினில்வேறு
எவ்விததெய்வங் களுமில்லைசத்தியம்பாரு (எம்)

அநுபல்லவி.

அம்பரமீதிலுமண் டாண்டங்கள்தோறும்
அனைத்திலுமுளனவ னாதியந்தமுமில்லான் (எம்)

சரணங்கள்.

நம்பினபேர்க் குத்தன்நாடு கொடுப்பவன்
நஞ்சரவந்தன் னில்நாளும் படுப்பவன்
விஞ்சிய வேதங்கள் மீதில் நடிப்பவன்
விரிஞ்சன்முதலோர்தொழும் விமலநிமலனவன் (எம்)

ஆதியில்மூலமென்ற யானையினிடம்நண்ணி
ஆதரித்தருள்செய்தோன் யாரென்றுநீயெண்ணி
மாதவர்களுக்கெட்டா மதுசூதனனென்றுன்னி
மனதினிலவன்திரு மந்திரந்துதிபண்ணு (எம்)

இதரதெய்வங்களா லேதேனுமில்லையென்றும்
ஈஸ்வரனொருவனே யிணையிலாப்பரனென்றும்
சததமுமேயவன்று ழிணைகளிலொன்றும்
சடகோபன்சாதித்த சகஸ்திரமொழிச்சான்று (எம்)

மாமகளாந்திருமங்கை யாண்டாள்சூட்டும்
மாலைதரித்தவன் மந்திரம்வெளிக்காட்டும்
ராமாநுஜமுனி சேவையைநிலைநாட்டும்
நாரணன்பெயரொன்றே நற்கதிதனிற்கூட்டும் (எம்)

---

55. மாமுனிவர்காந்தி வேதமந்ரம் என்ற வர்னமெட்டு.

இராகம்-தேசிகம்-தாளம்-ஏகம்.

மாயமான வாழ்விலாசை போதும் போதும் நாளும்
தூயதிரு மந்திரம் நீ யோதும் ஓதும் யானே
மத்தகமீதினிற் சத்திரம்வைத்துமே
இத்தரையாள்வோரும் செத்துமேவீழ்குவர் (மாய)
சேயும்பெண்டிர் சுற்றஞ்சந்தைக் கூட்டம் கூட்டம் நாமும்
சேமமற்ற போதவர்க ளோட்டம் ஓட்டம் நானே
தென்றிசைக்கோன் வந்து
கொன்றிடும்போதினி
லன்றவன் றன்னையே
வென்றிகொள்வாருண்டோ (மாய)
சந்ததம் ராமாநுஜரைப் பாடிப்பாடி . மிகச்
சொந்தமாகத் தொண்டருடன் கூடிக்கூடி வேறு
சஞ்சலமில்லாமல் நெஞ்சமே நீயவன்
செஞ்சரணங்களே தஞ்சமென்றடைவாய் (மா)

இராமாயணசங்கிரகம்

நொண்டிச்சிந்து

56. திருவளரயோத்தி நகரில் தசர
தேந்திரற்கு மதலையாய்ப் போந்தருளி
மருவலுமுனிவருடன் சென்று
மாமகத்தைக் காத்தரக்கி தனைமாய்த்தும்
கல்லுருவை நல்லுருவாய்ச் செய்து
கன்னியமாய் மாமிதிலை நண்ணியே சிவன்
வில்லதனையே யொடித்து உயர்
மெல்லியலாம்வை தேகியை மணமுடித்து

வரும்வழிதனிற் பரசு ராமன்
வந்துகர்வம்கொள்ள மனம் நொந்திடச்செய்து

அன்னைகைகேசி சொல்லும் உரையை
அட்டியின்றியே மனமொட்டி மகிழ்ந்து

தன்னிகரில் தேவியுடன் தம்பி
தான்வரவே யிவர்கானடைந்து

குகனுடன் நேசித்து அவன்
கொண்டுவந்த வோடமதிலே சென்று

ஓவியக்கிரியதனில் புகழ்
ஓங்குஜனகன் மகள் தன்னோடுமிருக்க

பரதனும் வந்து தொழவே அவர்க்கு
பாங்கான பாதுகையுந் தந்தனுப்பி

தண்டகவன மதனில் சென்றிடவே
தாவிவந்த விராதனையுங் கொன்று

பஞ்சவடிதனிலிருக்க அங்குவந்த
பாதகியாம் சூர்ப்பனகை மூக்குமுலையை

இளையவன் கொய்திடவே அவ்விடம்
எதிர்த்துவந்த கரதூடணரை

அதமாக்கியபின்பு மூவரும்
அகமிகமகிழ்வொடு மமர்ந்திருக்க

மாயமானாகவந்த மாரீச
மாவரக்கன்தனையுங் கொன்று

தேவியைக் காணாமல் திகைத்து
தேடியே மதங்கமலைதனை யடைந்து

அனுமனுக்கருள் புரிந்து அவனை
அன்புமிகுபக்தனாக்கி யின்பமுடனே

மரங்களேழையுந் துளைத்து வாலியை
மாய்ந்திடச்செய்து சுக்ரீபனுக்கு

மணிமுடி கவித்தபின்னர் சேனையும்
மயேந்திரகிரியினி லடைந்தவுடன்
தேவிதானிருக்குமிடம் சிறிய
திருவடிதன்னாலுளவறிந்து
வருணன்மேலே சரங்கள் சொரிந்து
வாருதியையே யடைத்து வீரமுடனே
ராவணன்முதலினோர்கள் வீழ்ந்திட
ரகுநாயகனேயுன் கோதண்டத்தால்
வெம்புசினத்துடன் மாய்த்து லங்கையை
வீடணர்தமக்குமே முடிகவித்து
பூமகள்தன்னோடும் சாகேத
புரிதனில்பரதர்க்குச் சேவைதந்து
பட்டாபிஷேகங்கொண்ட ஸ்ரீராமா
பாலன்ராமாநுஜனைக் காத்தருள்வாய்
ஜெய ஜெயரகுராமா சுபகர
நயகுண மிகுஜெய ஜெயராமா (ஜெய)

---

57. ஊஞ்சல்—ஆனந்தபைரவி.

அந்தரத்தி லமரர்களும் மகிழவே தான்
அணியணியாய் மன்னர்களுந்தொழுது நிற்க
சிந்தைமிகக்களிப்பெய்த வூஞ்சறன்னில்
ஸ்ரீதேவிதன்னுடனே சேர்ந்திருந்து
பந்தமிகுபரதன் வெண்குடைபிடிக்க
பரிவுடனேயிளையவர் சாமரைகள்வீசு
அந்தமதாயரம்பையர்கள் வடந்தொட்டாட்ட
ஐயனேரகுராமா ஆடிரூஞ்சல்.

172090

58 போதயனும் புரந்தரனும் மறைகள்பேச
புத்தேளிரெங்களுமே மலர்கள்வீச
பாதமதைப்பிடித்தனுமன் பணிந்துநிற்க
பாரதியுஞ்சோபன மங்களங்கள்பாட
மாதவருஞ்சீதாளைத் தொழுதுஆட
மைந்தன்ராமானுஜ னுன்பதத்தைநாட
ஆதரவாயானந்தபை ரவியில்சொன்னேன்
ஐயனேரகுராமா ஆடிரூஞ்சல்.

---

59. **இதுவுமது**

இராகம்-சங்காபரணம்-தாளம்-ஆதி

பல்லவி.

என்னவைபவம் கோபாலன்
ராதாதேவியுட னூஞ்சலிலே வாசுதேவன்
எழுந்தானே பேஷ் (என்ன)

அநுபல்லவி.

வர்ணமணிகள்முத்து வயங்குமண்டபந்தனில்
வந்துமுனிவ ராசி யோத மிகும்
வாத்தியங்களும்பல வாரியிளெலிபோல
வளைந்து தாம்தாமென்று மோத அங்கு
வந்துமனமகிழ்ந்தாள் மாதா
அசோதா பேஷ் (என்ன)

அன்னநடையுமுள்ள சின்னிடைமாதர்கள்
அருகில்வெண் சாமரைவீச அருள்
அய்யனழகைக்கண்டு துய்யகிரணமுறும்
வெய்யோனுங்கண் முகிழ்த்துக் கூச ஆயர்
அன்புடன்சுகந்தமது பூச
மறைபேச பேஷ் (என்ன)

அல்லியும்முல்லையுட னழகுமிகுந்தரோஜா
அலரியுந்துளவ முஞ்சூடி உய
ரந்தரந்தனிலுறு விந்ரனுதியர்போற்ற
அசைந்துவூஞ் சல்தனிலாடி நல்ல
ஆனந்தபைரவி தோடி
இசைபாடி பேஷ் (என்ன)
ஊர்வசியுடனின்னு முயருந்தெய்வீகப்பெண்க
ளுவந்துசோபன மொழிபாட உன்னை
உன்னிமனதில்துதி பண்ணும்ராமா னுஜன்
உன்கழல்தனைநிதம்தேட மிக்க
உத்தமபக்தர்கள் கூட
ஊஞ்சலாட பேஷ் (என்ன)

---

60 குமரனையே பாடி என்றமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

திருவடியேதாரும் சீதாபிராமச்சந்ரா (திரு)
அருமறைபுகழ்ந்திடும் வரநதிமகிழ்ந்திடும்
பரமபாகவதர்கள் பக்தியுடன்பணி
முத்தியின் வித்தெனும் (திரு)

(தொகையரு)

திருமேவுமார்பனே சித்தசன் றந்தையே
சீதரா வாசு தேவா
கருமேவுசெனனமில் லாதெனைக்காக்கவே
கருடன் மீதேறி வாவா

பாட்டு.

நாளு முந்தனை நாடி
ராமா னுஜதாசன் பாடி
நத்திவந்தேனே யுன்றன்
சித்தமகிழ்வுடன் வித்தகனேவுயர் (திரு)

பிர்ந்தாவனத்தில்

(61) **கோபிகைகள் கூடிப்பாடுதல்.**

சுருள் கும்மி

அந்தமிகுந்த முகுந்தனைச் சேரவே
சிந்தை மகிழ்ந்துமே வாருங்கடி இந்த
நந்தவனந்தனைப் பாருங்கடி இதி
லழகாகிய மலரோடைக
ளருகே பல மயிலாடுவ
தானந்தமாகவே காணுதடி பிர்ம்
மானந்தமாகவே தோணுதடி (அந்த)

மாவுங் கொய்யாவும் பலாவும் பழுத்திடும்
மாக்ஷிமையுற்ற நந்தாவனமே இரு
வாக்ஷியுமுற்ற பிர்ந்தாவனமே இன்னும்
மணமேவிய குணமேயுறு
தருமாமலர் நிறை சோலையில்
மஞ்சுநிகர்த்திடும் வண்ணனடி நாம்
தஞ்சமடைகுவோம் கண்ணனடி (அந்த)

வேடிக்கையாய் விளையாடிப் பலவிதம்
வேணுக்ஞானம் செய்யுந்தேவனடி எங்கும்
காணக்கிடையாத சேவையடி அவன்
விடமாகியபடநாகனின்
முடிமீதினில் நடமாடிய
வித்தகனைத்தினம் போற்றிடுவோம் துதி
சுத்தமனத்துடன் சாற்றிடுவோம் (அந்த)

ராமாநுஜன் போற்றும் தாமோதரன் பாதம்
நாளும்பணிந்து துதித்திடவே நம்மைச்
சூழும் பவங்களெல்லாம் விடவே மிக

நலமாகியநிலமீதினிற்
றலசேவகைள் பலவேகியே

நாடியே யன்பரைத் தேடிடுவோம் தேடிக்
கூடியவருடன் பாடிடுவோம் (அந்த)

---

62. இதுவுமது.

ஆனந்தம் ஆனந்தம் என்ற மெட்டு.

வாருங்கள் வாருங்கள் வாருங்களே வந்து
பாருங்கள் பாருங்கள் பாருங்களே

வாசமலர் சூழ்வனமே
நேசமாய்ப் பிர்ந்தாவனமே (வா)

வண்மை நிறைந்திடுஞ் சோலைச் சிங்காரம்
வாசவனுல கினும்மி தபாரம்
கண்ணணி ருந்திடுங் காக்ஷி கெம்பீரம்

கருணையுறுந் திருவருளைப்
பெற விதுவே தருணமடி (வா)

மண்ணி லடியவர்க் காய்வந்த புண்யன்
மாமலர் தன்னை நிகர்த்திடுஞ் சரண்யன்
எண்ணில்லா வேடிக்கை செய்திடுங் கண்யன்

எழில்மிகுமிப் பொழிலதனி
லிவனழகைத் தொழுதிடவே (வா)

மாதவ னூதிடும் வேயிசை மேவ
மாமயி லோடுசெங் காலன்னந் தாவ
ஆதரவாய்க் கிள்ளை கோகிலங் கூவ

அனகனமர் வனமிதனில்
நனிபெறவே மனமகிழ்வாய் (வா)

பச்சை நிறத்தவனோடு நாம்கூடி
பாலன் ராமாநுஜன் கீதத்தைப்பாடி
இச்சையாய்க் கைகள்கோர்த்து விளையாடி
இதமுடனே கதிபெறவே
சுதிலயமா யதிவிரைவில் (வாருங்கள்)

நாமாவழிகள்

அம்பலத்தரசே—என்ற மெட்டு

(1) ஹரிகரி யரிகரி ஹரிகரியே
அருமறையுருவே நரகரியே
(2) திருவுறை மார்பனே ஜெயகரியே
தீவினைதீர்த்திடும் முரகரியே (ஹரி)

(3) உனைவிட வேறொருதேவரியேன்
உத்தமவுன் புகழேதறியேன்
(4) பவமறுபணி யதிலுறையீசா
பக்தர்கள் போற்றிடும் ஜெகதீசா (ஹரி)

(5) தேவர்க்கும் மூவர்க்கும் முதல்வோனே
சீருடன் யாவையும் ஆள்வோனே
(6) ஆவலுடன் சொலும்முறை தானே
அன்புடன் கேட்பாயென் கோனே (ஹரி)

(7) பூமியிலடியனும் புழுவாகி
புன்மையுடன் பிறந்திருந்தாலும்
(8) ராமாநுஜனடியார் தங்கள்
நற்றிருவருள் பெறவரமருளே (ஹரி)

மங்களம்.

இராகம் மத்யமாவதி / ஸ்ரீராகம் தாளம்—ஆதி

பல்லவி.

ஸ்ரீ பரந்தாமனடியிணைக்கே
ஜெயமங்களம் பாடுவோம் (ஸ்ரீ)

அநுபல்லவி.

சிதேவிதன்னுடனே பூதேவிநீளையின்
மாதேவிகள் சூழக்கீதா வினோத பொன்
சித்திரமுற்றிடு
மற்புதமாமணி
முத்தமர்மண்டபம்
மத்தியிலேயுறும் (ஸ்ரீ)

சீராகவே கருடனேராய்ப் புறங்காப்பச்
சேனாதிபதியவர் தானேபணிகேட்பச்
சித்தமகிழ்ந்தய
னித்தனுமே தொழ
அத்தியிலேதுயி
லுத்தமனாகிய (ஸ்ரீ)

மாத்வரோங்கவும் பார்த்தர்வீயவும்
சீதாபிராமனும் யாதவனாகியே
மண்டலமீதினில்
தொண்டர்களுங்களி
கொண்டிடவேயுயர்
கொண்டல்நிறத்துறும் (ஸ்ரீ)

தாசாநுதாசர்க்கு நேசாநுகூலனே
சேஷாசனத்தி லரங்கேசா வெனத்துதித்து
தஞ்சமெனப்பத
மஞ்சலிசெய்திடும்
மஞ்சன்ராமாநுஜன்
நெஞ்சினில் வந்திடும் (ஸ்ரீ)

— —

வேறு மங்களம்.

திருமகள்நாதற்குஞ் க்ஷீராப்திவாசற்கும்
பெரியபெருமா ளானபிரானுக்கும்
அருமறைபுகழ்கின்ற திருமலைவாசற்கும்
அத்தகிரியருளாளர் பாதங்கட்கும்
மங்களம் மங்களம்
நித்யா ஜெயா
மங்களம் மங்களம்

திருநாரணன்றிவ்ய சேவடியிணைகட்குந்
திகழ்கின்றகௌ ஸல்யபாலனுக்கும்
கருமுகில்வண்ணனாங் கண்ணபிரானுக்கும்
கண்ணியமுடன்பரந் தாமன்பாதங்கட்கும்
மங்களம் மங்களம்
நித்யா ஜெயா
மங்களம் மங்களம்

ஸ்ரீதேவிபூதேவி நீளைமின்றன்னொடு
திருவுறுங்கோதை தன்மலரடிக்கும்
தீதேதுமில்லாத ஜயவிஜயர்கட்கும்
திருவாயுதத்தோடு சேனைநாதனுக்கும்
மங்களம் மங்களம்
நித்யா ஜெயா
மங்களம் மங்களம்

மாதவன்மலரடியாம் மாறன்றுள்கட்கும்
நாதமுனிமுதலாம் நம்தேசிகர்கட்கும்
ஆதாரமாயுற்ற வருளிச்செயல்கட்கும்
அன்புமிகுந்திடும் ஆழ்வார்தங்கட்கும்

மங்களம் மங்களம்
நித்யா ஜெயா
மங்களம் மங்களம்

பெரும்பூதூர்தனில்வந்த ஸ்ரீபாஷ்யகாரர்க்கும்
வரந்தரும்மணவாள மாமுனிக்கும்
சிறந்திடும்பட்டர்தம் பாதாம்புயங்கட்கும்
மறந்தும்புறந்தொழா மாதவன்பக்தர்க்கும்

மங்களம் மங்களம்
நித்யா ஜெயா
மங்களம் மங்களம்

மங்களம்பரந்தாமன் பஜனகீதத்திற்கும்
மங்களம்வைண வக்கோஷ்டிகட்கும்
மங்களம்ஹரிநாம பஜனைகூடங்கட்கும்
மங்களம்ராமாநுஜ மதத்தோர்கட்கும்

மங்களம் மங்களம்
நித்யா ஜெயா
மங்களம் மங்களம்.

வாழி.

வாழிவாழி சீதரன்றன் மாமலர்த்தாள் வாழியே
வாழிவாழி மாறன்வாழி பாஷ்யகாரர் வாழியே
வாழிவாழி பெரியஜீயர் பாதம்நாளும்வாழியே
வாழிவாழி பஜனைகீதம் வண்மையாகவாழியே.

ஸம்பூர்ணம்.

ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

சாற்றுப்பாசுரங்கள்.

சிற்றஞ்சிறுகாலே வந்துன்னைச் சேவித்து, உன்
பொற்றாமரை யடியே போற்றும் பொருள்கேளாய்
பெற்றம் மேய்த்துண்ணும் குலத்தில் பிறந்து நீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமற் போகாது
இற்றைப் பறைகொள்வானன்றுகாண் கோவிந்தா
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமேயாவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்
மற்றை நம்காமங்கள் மாற்றேலோரெம்பாவாய்

வங்கக்கடல் கடைந்த மாதவனைக் கேசவனைத்
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி
அங்கப்பறைகொண்ட ஆற்றை அணிபுதுவைப்
பைங்கமலத்தண்தெரியல் பட்டர்பிரான் கோதைசொன்ன
சங்கத்தமிழ் மாலைமுப்பதும் தப்பாமே
இங்கு இப்பரிசுரைப்பார் ஈரிரண்டுமால் வரைத்தோள்
செங்கண்திருமுகத்துச் செல்வத்திருமாலால்
எங்கும் திருவருள்பெற்று இன்புறுவரெம்பாவாய்

வாழித்திருநாமம்,

கோதைபிறந்தவூர் கோவிந்தன்வாழுமூர்
சோதிமணிமாடம் தோன்றுமூர்—நீதியால்
நல்ல பத்தர்வாழுமூர் நான்மறைக ளோதுமூர்
வில்லிபுத்தூர் வேதக் கோனூர்
பாதகங்கள் தீர்க்கும் பரமனடிகாட்டும்
வேதமனைத்துக்கும் வித்தாகும்—கோதைதமிழ்
ஐயைந்துமைந்தும் அறியாதமானிடரை
வையம் சுமப்பதும் வம்பு

திருவாடிப்பூரத்து செகத்துதித்தாள் வாழியே
திருப்பாவை முப்பதும் செப்பினாள் வாழியே
பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை வாழியே
பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள் வாழியே
ஒருநூற்று நாற்பத்துமூன்றுரைத்தாள் வாழியே
உயரரங்கர்க்கேகண்ணி யுகந்தளித்தாள் வாழியே
மருவாரும் திருமல்லி வளநாடி வாழியே
வண்புதுவைநகர்க் கோதைமலர்ப்பதங்கள் வாழியே

ஆண்டாள் திருவடிகளே சரணம்

ஜீயர் திருவடிகளே சரணம்

திருத்தாலாட்டு.

இராகம்-நீலாம்புரி.

மன்னுபுகழ்க் கௌசலைதன்
மணிவயிறு வாய்த்தவனே
தென்னிலங்கைக் கோன்முடிகள்
சிந்துவித்தாய் செம்பொன்சேர்

கன்னிநன்மா மதிள்புடைசூழ்
கணபுரத்தென் கருமணியே
என்னுடைய இன்னமுதே
இரா கவனே தா லேலோ.

மாணிக்கங்கட்டி வயிரம் இடைகட்டி
ஆணிப்பொன்னாற்செய்த வண்ணச்சிறுதொட்டில்
பேணியுனக்குப் பிரமன்விடுதந்தான்
மாணிக்குறளனே தா லே லோ
வையமளந்தானே தா லே லோ

தண்டம் சமர்ப்பித்தல்

எனைப்போல்பிழைசெய்வார் இவ்வுலகிலுண்டோ
உனைப்போல் பொறுக்கவல்லார் உண்டோ—அனைத்துலகும்
வாழப்பிறந்த எதிராசமாமுனிவா
ஏழைக்கிரங்காயினி

ஆழ்வார் திருவடிகளேசரணம்

எம்பெருமானார் திருவடிகளேசரணம்

ஜீயர் திருவடிகளே சரணம்.